KALANILAYAM

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ஞு நவம்பர் மீ 17உ [No. 45

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 881
2. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 1-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 883
3. தமிழ்ப்பாடம் நளவெண்பா - கலிதொடர்காண்டம் 885
4. திருக்குறள் நீதி (பொருட்பால்-அரசியல்). A. இராமலிங்கம் 887
5. குடிவாழ்க்கை (Plato's Republic) K. இராஜகோபால் 889
6. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 5. களம் 4) ஷேக்ஸ்பியர் நாடகம் 890
7. பொதிகைநிகண்டு (ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதி) S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 891
8. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) T. N. சேஷாசலம். B.A. B.L. 893
9. சேக்கிழார் திறனும் திருத்தொண்டர் புராண எழுச்சியும்—M. P. குமாரநாயகம் 895
10. வர்த்தமானம் 899

கலாநிலயம்

அறிவில்லாத் திறமை 3.

இச்சையுடன் சாராமல் நிகிலப் பொருள்களை நிரந்தரமாய் நினைத்திருக்கின்றவோர் மேன்மையே அறிவெனத்தகும் என்பதை எடுத்துக்காட்டி, தத்துவ ஆராய்ச்சியும் வித்தகநிலையும் அவ்வறிவின் மேன்மைக்கு ஆதாரமாகின்ற அமைதியையுங் கூறினோம். சமய உணர்ச்சியும் கலைப்பயிற்சியும் புரியவல்ல உதவியும் அன்னதே.

சமயத்தை, ஒருபுறம் தனித்தனி தெய்வங்களுடனும், மறுபுறம் தனித்தனி சாதிகளுடனும், சார்த்திச் சண்டைசெய்யும் நெடுங்களமாய்ச் சாதித்தல் மானுடச் சிறுமைகள் அனைத்திலும் மிக மிக அற்பமானதோர் செய்தி. ஆதலின், ஆகமங்களையும் ஆசாரங்களையும் கடவுளைப்பற்றிய கொள்கைகளையும் நாமிங்கு வழக்கிற் கழைக்கவில்லை. நாத்திகத்திற்கும் ஆத்திகத்திற்குங்கூட அந்தத்தில் பேதம் அதிகமில்லை என்று நினைப்பதற்குரிய விடயங்களை முன் நாம் "மறுப்பதும் உறுதியாமே" என்னுந் தலையங்கங்களில் காட்டியிருக்கின்றோம். அவ்வகைச் சிந்தனைகளில் இப்பொழுது இறங்காமல், தத்துவமும் வித்தகமும் வாய்ந்த சில மேலோர் கடவுளைப்பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் சிலவற்றை இங்குச் சுருக்கமாகத் தொடர்ந்து கூறுவது நம்முடைய கட்டுரையின் தெளிவிற்குச் சால உதவியாயமையும். கடவுளைப்பற்றி இந்தியவகுப்பினர் கொண்டிருந்த கொள்கைகள் பெரும்பாலோர்க்குத் தெரிந்திருப்பது இயற்கையாதலின், மேனாட்டு நினைப்பாளர்தம் கருத்துக்களை மாத்திரம் காட்டினாற் போதும். கடவுள் நம்மைக் கையாள்கின்ற முறைகளில் அநீதியும் கொடுமையும் அமைந்திருக்கின்றன என்று, வெளித்தோற்றங்களைக் கண்டு மயங்கிய சிலர் அதற்கெதிர் கடவுளை அநீதியாயும் கொடுமையுடனும் கையாளத் தலைப்படுகின்றனர். "ஏ, கடவுளே, நாங்கள் செய்யும் பாவங்களை நீ மன்னிக்கக்கூடியவனாயிருப்பதுபோலவே, நீயும் எங்களுக்குச் செய்யும் அநீதிக் கொடுமைகளுக்கு எங்களால் மன்னிக்கப்படவேண்டியவனாயிருக்கின்றாய்; ஆதலின் இப்பொழுதேஎம்முன் வந்து எங்களுக்கு உன் மன்னிப்பைக் கொடுத்து, எங்கள் மன்னிப்பையும் நீ பெற்றுக்கொண்டுபோ" என்று பாரஸீக மகாகவி ஓமர் கையாம் பரிவருத்தனை செய்யுமிது, அவ்வாறு தலைப்படுகின்றவர்தம் செய்தியையே ஆவலியச் சுவையுடன் தெரிவிக்கின்றது. எனினும், இத்தகைய சிந்தனைகளை நாமிங்குத் தொடா நினைத்திலம். மற்று, நன்மையோடு தீமையும் உடையவர் கடவுள் என்றும், அத் தீமைக்கு அவரை வாயார வைது, பின் அவர் நன்மையை நினைத்து மனமார வாழ்த்துவோம் என்று தற்கால அமெரிக்க நூலாசிரியர் ஜான் கூபர் பாவிஸ் என்பவர் கழறும் மொழிகளும் இங்குச் சிந்தனைக்குரியவைகளல்ல. நன்மையென்று மதிக்கப்படுபவைகளையும் தீமையென்று தோன்றுகின்றவைகளையும் உள்ளுணர்வின் செம்மையால் ஒன்றுசேர்த்து ஒற்றுமைப் படுத்தமாட்டா மானுடம் செய்துகொள்கின்ற "இராஜி" (Compromise) அது. கலைபொலிந்த கம்பரைப்போல், "அதிரேக மாயை யாவரறிவார்" என்ற வியப்புநிலையை விளக்குவது எல்லார்க்கும் எளியதாமோ!

இன்னவகை நினைவுகள் நிற்க, இனி ஏனையோர்பொருளுரைகள் சிலவற்றைச் சோதிக்கலாம். இவர்களில்

கடவுளின் நன்மையையும் தன்மையையும் பற்றிச் சிந்தித்தவர் சிலர்; மற்றுஞ்சிலர் அவைதாமெவ்வாருயினும் கடவுள்நம்பிக்கையின் நன்மை தன்மைகளைப்பற்றிச்சிந்தித்திருக்கின்றனர். எனினும் இவ்விரு இனத்தவரையும் அடியுடன் வேறுவேருகப் பிரித்துப் பேசுதல் இயலாது. மிகுதிபற்றியே ஓரினத்தவரை மற்ற இனத்தவரினின்று பிரித்துணர்தல் வேண்டும். தத்துவ ஆராய்ச்சிக்கெல்லாம் தந்தையெனக் கருதப்படும் கிரேக்க அறிஞர் ப்ளேட்டோ, இப் பின்னினத்தைச் சேர்ந்த பெற்றியில் கடவுளைப்பற்றிப் பேசிய சொற்களின் பிண்டப்பொருள் பின்வருமாறு:—

ப்ளேட்டோ:—கடவுளில் நம்பிக்கை இல்லாத ஜனங்களுக்குள் கட்டுப்பாடு ஒருபோதும் இருக்க இயலாது. அந்தக் கடவுள்என்பதை, ஒரு ஆதிசக்தி அல்லது ஒரு முதற்காரணம் என்ற அளவேயாய் உருவும் குணமுமில்லா ஒன்றற்குமறுபெயராய்க்கருதிக்கொள்வதாற் பயனில்லை. தானென்ற தன்மையில் தனிநிற்கமாட்டாதவொன்று ஜனங்களிடையே நம்பிக்கையையும் பக்தியையும் சுயநயமற்ற தியாகங்களையும் தூண்டுதற்கு எவ்வாறு ஆதாரமாகும்; மேலும், புண்பட்ட இதயங்களுக்கு ஆறுதலும் அல்லலுற்ற ஆன்மாக்களுக்குஆற்றலும் அது அளிப்பது எங்ஙனம்? 'இருக்கின்றேன்'' என்று உருவமொடுஉரைக்கவல்லஒருகடவுளே இவைகளைச் செய்தற்கியல்வதாகும். அதுவுமன்றி, அளவிறந்த இச்சைக்கு ஆளாக்காமல் மானுடமனத்தை ஓர் எல்லைக்குள்ளே நிலைநிறுத்தக்கூடியதும் இத்தகைய கடவுளே. கடவுள்நம்பிக்கையுடன், ஆன்மா அழிவற்றது என்னும் நம்பிக்கையும் சேருமாயின் பின்னுமோர்படி நன்மையே. மறுபிறப்பு உண்டென்ற நினைவுடையராயின் மனிதர் இவ்வொரு பிறப்பிலேயே எல்லாம் எய்திடவேண்டுமென்று விரைந்தலைந்து சீர்கெட்டுழலமாட்டார். இப்பிறவியின் துன்பங்களைப் பொறுப்பதற்கும் இந்நம்பிக்கை பெரியதோர் உதவி செய்யும். எனினும், இந்நம்பிக்கைகளின் உண்மையொன்றையும் நிதரிசனமாய்க் காட்டுவது முடியாதென்றே வைத்துக்கொள்வோம். நம்முடைய அன்பும் நம்பிக்கையும் திரண்டு திரண்டு பெற்றதோர் உருத்தானே கடவுளென்று கூறப்படுவதாகவும் முடியலாம். (மாரிஸ் மாடர்லிங்க் என்னும் பெல்ஜியதேசத்து அறிஞர் அயிர்த்தவண்ணம்) ஆன்மாவென்பது நமது தூயவாழ்க்கையைத் தொடர்ந்துநிற்கும் ஓர் திப்பிய ஆசையின் மயக்கத்தில் எழுகின்ற கனவின்நிழலே ஆயினும் ஆகலாம். யாழ்நின்றெழும் இன்னிசையானது அந்த யாழ் மாய்வதுடன் தானும் மாய்ந்துவிடுவதுபோல், நம்மிலிருந்து எழுகின்ற அவ்வான்மா நம்முடன் மாய்ந்தும் போய்விடும் என்று எண்ணப்புகினும் என்? எனினும், கடவுளிடத்திலும் ஆன்மாவிடத்திலும் நம்பிக்கை வைப்பதால் நமக்கு எவ்விதத் தீங்கும் நேராமையுடன் அளவிறந்த நன்மைகளே விளையுமென்பதோ ஐயமற நிற்கின்றவோர் நிச்சயம்—

கடவுளின் உண்மையைக் காட்சிப்பிரமாணத்தால் நிரூபிக்க இயலாவிடத்தும் அந்நம்பிக்கையை, அயிர்ப்பதனினும் கடைபிடிப்பதே நன்மை என்னும் தன்மையிற்ருன் ப்ளேட்டோ இப்படிக்கூறிஞரன்றி, நல்வாழ்விற்குச் சாதனமான ஒரு பொய்யேயாய் அவர் கடவுளைக் காட்டிக்கொடுத்துவிட்டார் என்று எண்ணலாகாது. இனி, இவருடைய சீடரும், பிற்காலத்துத் தத்துவ ஆராய்ச்சிக்கெல்லாம் தலைமை வகித்தவருமாகிய அரிஸ்டாட்டல் உரைத்திருக்கின்றவைகளையும் மனத்திற் கொள்ளலாம்—

அரிஸ்டாட்டல்:-இயற்கைநிகழ்ச்சிகளெல்லாம் அவ்வவைகளுக் கிருக்கும் அமைப்பின் சக்தியினுலேயே இயக்கப்பெறுகின்றன. புறத்திருக்கும் ஒருசக்தியின் சித்தத்தால்தான் இந் நிகிலநிகழ்ச்சிகள் முறைமையாக நடைபெறுகின்றன என்று கொள்ளவேண்டிய அவசியமில்லை. தெய்வத்தின் சித்தமும் இயற்கையின் செய்கையும்ஒன்றுபட்டிருக்கின்றன என்றவளவில் உரைக்கலாமேயொழிய அச்சித்தத்தால்தான் இந்தச்செய்கைகள் நிகழ்கின்றன என்று எண்ணுவது பிழை. "அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்ற அவ்வுலகறிவாக்கியத்தை அரிஸ்டாட்டல் இரண்டாகப்பிரித்து, "அவனும் இருக்கின்ருன், அணுவும் அசைகின்றது. எனினும் இவ்வணு தன் இயற்கைக்குஇணங்கியவோர்சக்தியால் தானே அசைகின்றது. இவ்வாறு இது தன் இயற்கைக்கு இணங்கிய சக்தியால் அசைகின்ற முறைமை அவனுக்குச் சம்மதமே'' என்று மிகவும் நுண்ணியவகையில் விளக்குவார். இப்படியே, ஆழாழி கரையின்றி நிற்பதும் அந்தரத்து அகிலகோடி தாழாமல் நிலைநிற்பதும், முட்டைக்குள் கருவளர்வதும்இவைபோன்ய எண்ணரிய இயற்கைச்செய்திகளுடன் மானுட விவகாரங்களும், அவ்வவைகளின் இயற்கையமைப்பு வரன்முறையொழுக்குக்களிற் கிணங்கத் தாமாகவே நடைபெறுவனவாக அரிஸ்டாட்டல் சொல்வாரல்லாது இவைதாம் ஒரு முழுமுதற் கடவுளின் சித்தத்தால் நடத்தப்பெறுகின்றன என்பது அவரது கொள்கையாகாது; ஆயினும், அக்கடவுளின் சித்தத்திற்கு மாருக இவை நிகழ்கின்றனவோ என்னின், அதுவுமன்று. அக்கடவுளின் சித்தமும் அது, இவைகளின் நிகழ்ச்சி முறை இயற்கையும் இது. ஆதலின் சாட்டையிற் பம்பரம் என்கின்ற செய்தி அரிஸ்டாட்டலினிடத்தில் செல்லாது.

இந்தநிலை நாத்திகம்போல் நாறுகின்றதெனினும் அரிஸ்டாட்டல் நாத்திகரல்லர். மனிதனுடைய கற்பனையின்வண்ணம் கழறப்பெறுகின்ற தெய்வங்கள் அல்லாவிடினும், கடவுள் என்பது ஒன்று உண்டு என்றே அரிஸ்டாட்டல் கொண்டனர். கடவுள், உலகங்களைப் படைக்கின்றிலராயினும், இயக்குகின்றனர். அக்கடவுளிற்கு, உருவமில்லை, பிரிவில்லை, பாலில்லை, காமக்குரோதாதிகளில்லை, மாறுதலில்லை; அவர் முற்றிய முழுமையாய் நிரந்தரமாயிருக்கின்ருர். கடவுள், உலகங்களை இயக்குகின்றது ஓர் எந்திரசக்தி போன்றதன்று; உலகவிவகாரங்களுக் கெல்லாம் தொகுதியாகிய வொரு தோன்ருத நோக்கமே அவ்வியக்கத்தின் தன்மையென்னலாம். காதலியொருத்தி தன் காதலனை இயக்குந்தன்மை எவ்வாறே அவ்வாறே இதுவும் என்பர் அரிஸ்டாட்டல். காதலன் காதலியின்பால் இழுக்கப்பெறுகின்ருனயினும் அவள்தான் இப்படி இழுக்க வேண்டுமென்று சித்தம்வைத்து அதற்குரிய வொரு சக்தியை அனுப்புகின்ருள் என்பதற்கில்லை. காதலன் செய்பவைகள் காதலியின் சித்தத்திற்கு இசைந்தவைகளாயிருக்கின்றன; எனினும் இன்ன இன்ன அவன் செய்யவேண்டும் என்றுஇவள்சித்தங்கொண்டு அன்னவைகளை அவன் செய்யுமாறு ஒரு சக்தியால் இவள் தெரிந்து இயக்கினள் என்பது ஏற்[illegible]

து கொணர்ந்து தன் நாயகியின் மொய்குழலிற் சூட்டுகின்ற தலைவனை அவ்வாறுசெய்ப இயக்கியது 'அவள்' என்னும் அம் முழுமையேயொழிய, அவள் சித்தமென்றேனும், அச்சித்தத்தின் தனிப்பட்ட ஒரு சக்தியென்றேனும் கருதுவது நேரிதன்று. அரிஸ்டாட்டலின் கடவுள் உலகத்தை இயக்கும் வண்ணம் இவ்வண்ணமே. இயற்கையின் முதற்காரணமும், விடயங்களின் நோக்கமுடன் வேகமும், உலகத்தின் உருவமும் அதன் உயிரின் தத்துவமும் அவ்வுயிர்களின் வளர்ச்சியின் முடிவும் ஆவது கடவுள் அக்கடவுளும் ஓர் ஆள் அன்று, ஆள்பவனுமன்று—அஃதோர் அதிசய சக்தி—

அரிஸ்டாட்டலின் கொள்கையில் முரண் சிறிது தோன்றக்காணலாம். மற்று, முரண்விளையப் பேசுவது அரிஸ்டாட்டலின் வழக்கம். தன்னைத் தானே யுணர்கின்ற ஓர் தத்துவம் என அரிஸ்டாட்டல் இக் கடவுளைக் காட்டியிருக்கின்றனர். அக்கடவுள் ஒன்றும் ஒருபோதும் செய்வதில்லை. ஆசையும் இச்சையும் நோக்கமும் அக்கடவுளிற்கு ஒன்றுமில்லை. விடயங்களின் சாரத்தைப்பற்றிச் சிந்திப்பதே அக்கடவுளின் தொழில்போலும்; மற்று எல்லாவிடயங்களின் சாரமும், எல்லா உருவங்களின் உருவமும், அக் கடவுளே யாதலால், தன்னையே தான் சிந்தித்திருப்பதன்றிக் கடவுளுக்கு வேருேர் காரியம் இருப்பதென்பது இயலாது. எனின், "ஒன்றும் செய்யும் வகையின்றிப் பேரளவில் சும்மாவிருக்கின்ற ஆங்கிலேப அரசரே போலும், பாவம் இந்த அரிஸ்டாட்டலின் கடவுளும்'' என்று வில் ட்யூராண்ட் என்னுமோர் அமரிக்க நூலாசிரியர் ஆவலியம்செய்வது ஒருகால் பொருத்தமுள தாகலாம்.

—§—

12 DEC 1932

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[868-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பத்து 1-ம் தசகம்.

9-ம் பாசுரம்.

படிமன்னு பல்கலன் பற்ரோ
டறுத்தைம் புலன்வென்று
செடிமன்னு காயம்செற் ருர்களு
மாங்கவனை யில்லார்
குடிமன்னு மின்சுவர்க்க மெய்தியு
மீள்வர்ண் மீள்வில்லை
கொடிமன்னு புள்ளுடை யண்ணல்
கழல்கள் குறுகுமினே.

உரை:—படி-பூமி என்ன, அதாவதுமனிதர்களது வீடு வயல் தோட்டம் என்ன, மன்னு பல்கலன்-ஸ்திரமான விலையுயர்ந்த நாளுவிதமான சிறந்த ஆபரணங்கள் என்ன ஆக இவைகளெல்லாவற்றையும், பற்ரோடு அறுத்து - ஆசை கொஞ்சங்கூட இல்லாமல் விட்டு, ஐம்புலன்வென்று - ஐம்புலன்களையும் அடக்கி, செடிமன்னு - தாங்கள் தவம்செய்யுமிடத்துச் செடிகள் பூண்டுகள் முதலியன அடர்ந்து முளைப்பினும் அவைகளைக்களையாமல், காயம்செற்ருர்களும்-தங்கள்தேஹத்துக்குச் சுகம் பாராட்டி அநுபவிப்பதின்றி வருந்தினவர்களுக்கும், ஆங்கு - அந்தத் தபஸ் விஷயத்திலே, அவனை இல்லார்-ஈசன் துணை இல்லாமல் தவம் பலிக்காது. குடிமன்னும்-பூமியில் தவஸிகள்ஒரு நூற்ருண்டில் மரிப்பதுபோ லில்லாமல் அநேக நூற்ருண்டுகள் அழியாமல் ஸ்திரமாகி வசிக்கக்கூடிய, இன்சுவர்க்கம்-இனிமையான சுக அநுபவமுள்ள சுவர்க்கத்துக்கு ஏகியும் ஈசனருளால் இருந்து பிறகு புண்ணியம் தீர்ந்தவுடன், மீள்வர்கள் - பூமிக்குத் திரும்புவார்கள். மீள்வில்லை-திரும்பிப் புனர்ஜந்மம் யாருக்கில்லையென்ருல், கொடிமன்னு - சாக்ஷாத் விஷ்ணுபகவானது துவஜத்திலே ஸ்திரவாஸியாயிருக்கின்ற, புள்ளுடை அண்ணல் கழல்கள்-கருடபகவானுக்கு எஜமானை திருநாராயணன் திருவடிகளை, குறுகுமினோ-கிட்டி அணைந்து தஞ்சமாகப் பற்றுங்கோள். அப்பொழுதே உங்களுக்கு மறுபிறப்பில்லை.

——

10-ம் பாசுரம்.

குறுகமிக வுணர்வத் தோடு
நோக்கி யெல்லாம்விட்ட
இறுகலிறப் பென்னும் ஞானிக்கும்
அப்பய னில்லையேல்
சிறுக நினைவதோர் பாசமுண்டாம்
பின்னும் வீடில்லை
மறுகலி லீசனைப் பற்றி
விடாவிடில் வீடஃதே.

பதவுரை:—உணர்வத்தோடு - ஞானத்தோடு, அதாவது இங்கு ஆத்மாவோடு, (ஆத்மா ஞானசுவரூபன் என்று நிர்ணயிக்கக் கூடும்) குறுக - வெகு விரிவாய் இங்கு மங்கு மோடித் திரியும் மனதை இழுத்துத் தன் ஆத்மாவையே சோதிக்கும் முயற்சியில் குறுக்கி நிலைபெறச் செய்து (Concentrate என்கிற ஆங்கில பதத்தின் பொருள்.) மிக நோக்கி - பிரயத்நசாத்தியமாய் நிறுத்தி, எல்லாம் விட்ட-ஆத்ம விஷயத்தில்தவிர மற்ற எல்லாவிஷயங்களிலும் ஆசையை விட்டவனும், இறுகல் - விசாலமான - அதாவது பரிபூரண பிரம்மாநந்தத்தை அநுபவிக்க மனமில்லாமல் அதைவிடக் குறைந்த ஆத்மாவைமாத்திரம் செலுத்தியுள்ளசுவரூப ஆநந்தத்தை, இறப்பு என்னும் - இறப்பு அதாவது முடிவு அல்லது மோக்ஷமென்று நினைக்கும், ஞானிக்கும் - ஓர்வகுப்பு யோகியாகிய ஞானயோக நிஷ்டனுக்கும், அப் பயன்-ஆத்மாவலோகனம், அதாவது பரிசுத்த ஆத்மசுவரூபத்தைக் காண்கையாகிற சுகம், இல்லை—பகவானை ஆச்ரயிக்காவிட்டால் கிடைக்காது. பகவானை ஆச்ரயிக்காவிடில் பூர்வகர்மத்துப் பயன்கள் குறுக்கிட்டு யோகம் சித்திக்காமல் போம்; ஞானயோகிக்குப் பரிசுத்தாத்ம சுவரூபம் பகவானது கிருபையால் கிட்டுவது. சிறுக-அல்பமாக, நினைவது-நினைப்பதாகிய நினைவிற்குக் காரணமாய், ஓர் பாசம்-உலக விஷயங்களில் மூட்டுவதான சங்கம், உண்டாம் - ஸம்பவிக்கும், அதாவது இந்த ஞானியின்மனத்திற்கு ஆத்மாநுபவம் பூரணமாக ஏற்படாது. மேலும், மறுகலில்-உடம்பைத் துறக்கும் சமயத்தில், ஈசனைப் பற்றி - பகவானது சுவ

ரூபத்தையும் தூய்மையையும் ஆனந்தாதி குணங்களையும்நினைந்து, அதற்குச் சமமாக ஆத்மஸ்வரூபம் மாட்சிமை உள்ளதென்று விசுவஸித்து, விடாவிடில் - இந்த நினைவு உயிர் துறக்கையில் ஸம்பவியாவிடில், வீடில்லை -கேவல ஆத்ம ஸ்வரூபம் பிறகு கிடைக்காது.

பகவத்கீதையில் கூறியவண்ணம், ஞானயோகநிஷ்டனுக்கு, பகவானுக்கு ஸமாநமாகத் தன் ஆத்மசுவரூபமிருக்கிறதென்ற மனோபாவம் தேகத்தை விடுகின்ற வரையில் இருக்கவேண்டுமென்ற கட்டளையை நினைத்துக் கூறியபடி. வீடு - முக்கியமான மோக்ஷத்திற்கும், அதாவது பகவானுக்கு வைகுண்டத்தில் கைங்கரியம் செய்கையாகிற உண்மையான மோக்கத்திற்கும், பக்தி யோகத் துவக்கத்திலும், யோகம் அதாவது பக்தியோகம் நடைபெறச் செய்கையிலும், பிறகு உயிர்துறக்கையிலும் பகவானை ஸ்மரித்து ஆச்ரயிக்கவேண்டும். அஃதே - உபாயமான அங்கங்களிலும் முயல்கின்ற தபசிலும், அநுசந்திக்கின்ற யோகத்திலும் வேண்டிய ஸாதநங்கள் வேறுபடாமல் ஒன்றுயிருக்கின்றன.

குறிப்பு 1.—இப்படி ஆழ்வார்கூறுவதன் தாத்பரியம் என்னவென்றால், ஒரே தவத்திற்குப் பெரிய பயனை மோக்ஷம் கைக்குக் கிட்ட இருக்க அதே தவத்துக்கு அல்பமான பரிசுத்த ஆத்மஸ்வரூபமான சிறு பயனை அபேக்ஷிப்பானேன்? ஐயோ! என்ன புத்திக்குறைவு! இப்படிப் பெரும்பொருள்கிடைக்கத் தவப்பயன் காத்திருக்க அதைக் கவனிக்காமல் அல்பப் பயனைச் சில மூடர்கள் ஞானயோகிகள் என்று பெயரிட்டுக்கொண்டு தேடுகின்றார்களே, இதென்ன இழவு, என்கிறபடி

குறிப்பு 2:–பகவத்கீதையில் செப்பிய "ஜிஞ்ஞாஸு" என்கிற பகவத் பக்தர்களின் ஒரு பிரிவுக்காரரைப் பற்றித்தான் இப்பாசுரம் கூறுகின்றது. "ஜிஞ்ஞாஸு" என்கிற ஆரிய பதத்திற்கு "ஒன்றை அறிய ஆசை' என்பது பொருள்; அங்குப் பகவத்கீதையில், ஆத்மாவின் பரிசுத்தாத்ம சுவரூபத்தை அறிய இச்சிக்கின்றவன் என்று பொருள்படும். மேல்கண்ட 1-வது குறிப்பில், மரணதெசையிலுங்கூட ஈசனுக்கு ஸமானமான ஆத்ம சுவரூபம் இருக்கின்றதென்ற மனோபாவம் ஆவசியகம் என்பது கீதை 8-ம் அத்தியாயம் 6 சுலோகத்தினால் ஏற்படுகின்றது. இதை உட்கொண்டே ஆழ்வார் 'மறுகலில் ஈசனைப் பற்றி", ஆத்மாவைக்காணத் தவம் செய்துநிற்கும் யோகியும் உயிரை விடவேணு மென்கிறார் இப்பிரகரணத்தில் 16வது அத்தியாயம் 9,10,13 சுலோகங்களை உற்றுப் பார்க்கவேண்டும். ஆத்மசுவரூபம் மங்களமா அமங்களமா வென்றும் "அது இது வென்றும் ஒருவருக்கும் உணரலாகாது, உணர்ந்தாலும் காண்பதரிதென்றும்" ஆனால் இந்த ஆத்மசுவரூபத்தைப் பகவான் இன்னருளால் தாம் உணரப்பெற்றாரென்றும் 8-ம் பத்து 8-ம் திருவாய்மொழி 5-ம் பாசுரத்தில் கூறுகின்றார். ஏன் காண்பது அரிது என்பதையுந் தாமே கூறுகின்றார். சுகங்கள் என்று கருதி அநுபவிக்கப்படுகின்றவையெல்லாம் அல்பங்களென்றும் அஸ்திரங்களென்றும் அறிந்து அந்தப் பிரகிருதி பந்தங்களிலே அகப்படாதே ஞானம் நன்றாய்க்கிடைக்கவேணும். அப்படி ரஸங்கள் பசையற்றுப் போனால் ஆத்மசுவரூபம் கிட்டும். இரண்டுமரிது. தேறினாலும் உயிர்துறக்கையில் பகவானைத் தேஹம் முடியும்சமயத்தில் ஞாபகத்துள் வைத்து உயிர்துறக்கவேண்டும். இது அஸாத்தியம்; ஏனெனில், அச்சமயத்தில்' 'ஐயோ இவர் உயிர் துறக்கின்றாரே என்று சுற்றத்தாரும் நண்பரும் கூடி இறக்கப்போகிறவனோடு அநுதபிக்கின்றார்கள். ஏற்கனவே மனத்தளர்ச்சியுள்ள யோகிக்குப் பிறரது அநுதாபம் யோகநிஷ்டையைக் குலைத்துவிட "உன் மத்தன்போல் பித்தே ஏறி, அநுராகம் பொழிகிறதால் அவன் ஏமாந்துபோகிறான். இவனுக்கு, பகவானோடு ஆத்மசுவரூபத்தை ஒப்புக்கூட்ட, பகவானை நினைக்கவும் ஆத்மாவை நினைக்கவும் இவ் விரண்டுக்கும் ஒப்புக்கூட்ட முயலவும் முடியாது, என்று தாமே 8-ம் பாசுரத்தில் அருளிச் செய்கிறார்.

11-ம் பாசுரம்.

அஃதே யுய்யப்புகு மாறென்று
கண்ணன் கழல்கண்மேற்
கொய்பூம் பொழிற்சூழ் குருகூர்ச்
சடகோபன் குற்றேவல்கள்
செய்கோலத் தாயிரம் சீர்த்தொடைப்
பாட லிவைபத்து
மஃகாமற் கற்பவ ராழ்துயர்
போயுய்யப் பாலரே.

உரை:—அஃதே-அதுவே, அதாவது எம்பெருமானுக்குக் கைங்கரியமாகக் கவிபாடுவதே, உய்யப்புகுமாறென்று-நன்கு பிழைக்கும் வழி என்று நிர்மாணித்து, கண்ணன் கழல்கள்மேல்-ஸ்ரீ கிருஷ்ணன் திருவடிகள் விஷயமாக, கொய்பூம் பொழில்சூழ் குருகூர் - உத்தியானவனங்களை உடைய திருக்குருகூர், சடகோபன்-ஆழ்வாராலே, குற்றேவல் செய்-கைங்கரிய ரூபமாகச் செய்யப்பெற்ற, கோலத்து ஆயிரம் - அலங்காரமான ஆயிரம் பாட்டுக்களில், சீர்-சீர்மையான குணங்களும், தொடை-சந்தர்ப்பங்களும் அடங்கிய, இவைபத்தும், அஃகாமல் கற்பவர் - ஆசூயை நிந்தை இவைகளில்லாமல் அப்பியஸிப்பவர், ஆழ்துயர் போய் - ஆழ்ந்த துக்கங்களைத் தாண்டி, உய்யப் பாலரே - பகவத் கைங்கரிய மஹாரஸத்தைப் பெறயோக்கியர்களாவார்கள். அதாவது பெறுவார்கள், இது நிச்சியம். இந்தத் தசகத்தின்நோக்கு—ஐசுவரியம் கைவல்லியம் முதலியன அல்பகால அநுபவமாகையாலும் நிலைபெறாத பேறுகள்ஆகையாலும் அவற்றை உபேக்ஷித்து அநந்தமான ஸ்திரபலத்தை அளிக்கக்கூடிய எம்பெருமானைப் பற்றுங்கோள், என்பதாம்.

விசேஷக் குறிப்பு:—ஒன்று உணரவேண்டும். "கைவல்லியம்" என்பது இதர மதங்களில் மோக்ஷத்திற்கு மறுபெயராக அமைகிறது. ஆழ்வாரதுமதத்தில் ஆத்ம சுவரூப அநுபவமாகிற அற்பப் பயனுக்கு இக்குறிப்பெயராக, பத்தாவது பாசுரத்தின் உரையில் யாம்வரைந்துள்ள அர்த்தத்தில் மாத்திரம் இது உபயோகிக்கப் பட்டிருக்கிறது. ஸ்ரீராமாநுஜமதம் இப்பெரியார் நோக்கத்தையே அநுசரித்திருக்கிறது. வைணவர்களின்மோக்ஷம் என்னவென்றால்-ஸ்ரீமந் நாராயணனருளால் அப்பிராகிருதமான வைகுண்டம்ஏகிஅந்தப் பரமபதத்தில் மறுபிறப்புக்களின்றி ஸ்திரவாசம் செய்து ஆநந்தக்களிப்புண்டுதனக்கு இஷ்டமானகைங்கரியத்தைச் சுவயேச்சையாயும் சுவயப்பிரயோஜனமாயும்செய்துகளிப்படைவதே. இந்தப் பணிவிடையைப் பகவான் உகப்பாய் ஏற்றுக்கொள்வதே பக்தன் கருதும் பிரதிப்பிரயோஜனம். அருமைப்புதல்வனுக்குஇன்னடிசிலும்தீங்கனியும் ஊட்டுவது அம்மகனது உகப்புக்காகவென்று தோன்றினாலும் உண்மையில் தகப்பன் மனம் களிப்படைவதுபோலப் பகவத் கைங்கரியம் இருதலையிலும் பக்தனது உகப்புக்கே ஆகும்.

தமிழ்ப் பாடம் 45.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[865-வது பக்கத் தொடர்ச்சி]

பிரிந்தகன்ற நளனைத் தேடித்திரிந்த தமயந்தி ஒரு பாம்பின்வாய்ப் பட்டதையும், அவளையொரு வேடன் வந்து மீட்டதையும் இனிவரும் சில செய்யுள்களிற் காண்போம்.

வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியால்
மோட்டு வயிற்றரவு முன்றோன்ற—மீட்டதனை
ஓரா தருகணைந்தா ளுண்டே னறற்கூந்தற்
போரார் விழியாள் புலர்ந்து. 117.

பதப்பிரிவு:—வேட்ட கரியை விழுங்கி பெரும் பசியால் மோட்டு வயிற்று அரவு முன் தோன்ற மீட்டு அதனை ஓராது அருகு அணைந்தாள் உண் தேன் அறல் கூந்தல் போர் ஆர் விழியாள் புலர்ந்து.

பதவுரை.

வேட்ட - (தான்) விரும்பிய
கரியை - (ஒரு) யானையை
விழுங்கி - விழுங்கி
மோட்டு - மோடான
வயிற்று - வயிற்றையுடைய
அரவு - பாம்பு (ஒன்று)
மீட்டு - பின்னும்
பெரும் - பெரிய
பசியால் - பசியோடு
முன் - எதிரே
தோன்ற - வர,
தேன் - வண்டுகள்
உண் - மொய்க்கின்ற
அறல் - கருமணல் போன்ற
கூந்தல் - கூந்தலையும்,
போர் - போர்த்தொழில்
ஆர் - பொருந்திய
விழியாள் - விழிகளையும் உடைய தமயந்தி,
அதனை - பாம்பு வருவதை
ஓராது - அறியாமல்
அருகு - (அப்பாம்பிற்கு) அருகே
புலர்ந்து - சோர்வடைந்து
அணைந்தாள் - நெருங்கினாள்.

விரிவுரை:—யானையை விழுங்கியும் அடங்காத பசி பின்னுங் கொண்டிருந்த வொரு பெரும் பாம்பிற்கருகே, சோர்ந்திருந்த தமயந்தி, அதனை அறியாமற் சென்றடைந்தாள். அவளையும் பற்றி அப்பாம்பு விழுங்கத் தலைப்பட்டது. முன்னரே யானையை விழுங்கி அதன் வயிறு மோடிட்டிருக்காதாயின் பிடித்த இந்தத் தமயந்தியை அதுதான் ஓரேவாயாய் விழுங்கிப் போயிருக்கும். அவ்வாறு நிகழாமல், பாம்பின் வாயில் பாதியுடல் முழுகப் பத்தினித்தெய்வந்தானோ இவளென்று நம்மனோர் பரவும்படி அவள்தன் நாயகனைத் தொழுதழைக்கவும், அன்னவளை வேடன் ஒருவன் வந்து காப்பதற்கும், நேரம் தரும்பொருட்டே புகழேந்தி, யானையை விழுங்கியிருந்த பாம்பினால் அவளை விழுங்கவைத்தார் போலும்.

அங்கண் விசும்பி னவிர்மதிமேற் சென்றடையும்
வெங்க ணரவுபோன் மெல்லியலைக்—கொங்கைக்கு
மேலெல்லாந் தோன்ற விழுங்கியதே வெங்கானின்
பாலெல்லாந் தீயுமிழும் பாம்பு. 118.

பொழிப்புரை:—அந்தக் கொடிய காட்டிலெல்லாம் தீயைப்போன்ற விஷத்தைக் கக்குவதாகிய அப்பாம்பு, அழகிய இடமகன்ற வானத்தில் விளங்குகின்ற சந்திரனைச் சென்று பிடிக்கும் குரூரத்தன்மை பொருந்திய இராகுவென்னும் பாம்பைப்போல், மென்மைத் தன்மைவாய்ந்த தமயந்தியின் கால்களைப்பற்றி அவள் முலைவரையில் விழுங்கிவிட்டது.

வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவநின்
தாளடைந்து வாழுந் தமியேனைத்—தோளால்
விலக்காயோ வென்றழுதாள் வெவ்வரவின் வாய்க்கிங்
கிலக்காகி நின்றா ளெடுத்து. 119.

பதப்பிரிவு:—வாள் அரவின் வாய் பட்டு மாயா முன் மன்னவ நின் தாள் அடைந்து வாழும் தமியேனை தோளால் விலக்காயோ என்று அழுதாள் வெம்மை அரவின் வாய்க்கு இங்கு இலக்கு ஆகி நின்றாள் எடுத்து.

அன்வயம்:—இங்கு, வெம்மை அரவின் வாய்க்கு இலக்கு ஆகி நின்றாள், "மன்னவ, நின் தாள் அடைந்து வாழும் தமியேனை, வாள் அரவின் 'வாய்ப்பட்டு மாயாமுன் (உன்) தோளால் விலக்காயோ" என்று எடுத்து அழுதாள்.

பதவுரை.

இங்கு - இக்காட்டில்,
வெம் - கொடிய
அரவின் - பாம்பின்
வாய்க்கு - வாய்க்கு
இலக்கு ஆகி - குறியாகி, இரையாகி
நின்றாள் - நின்றவளாகிய தமயந்தி,
"மன்னவ - வேந்தனே,
நின் - உன்னுடைய
தாள் - பாதங்களை
அடைந்து - (தஞ்சமென) மனதிற்கொண்டு
வாழும் தமியேனை-தனியாய் வாழ்கின்ற என்னை
வாள் - வாள்போன்ற பற்களையுடைய
அரவின் - பாம்பினது
வாய் - வாயில்
பட்டு - அகப்பட்டு
மாயாமுன் - நான் சாவதன்முன்
தோளால் - (உன்) தோளினால்
விலக்காயோ - விலக்கிக் காக்கமாட்டாயோ"
என்று - என்று
எடுத்து - கூவி
அழுதாள் - அழுதாள்.

விரிவுரை:—தமயந்தி தன் நாயகன்பால் பாராட்டுகின்ற பக்தியின் சிறப்புச் சொல்லுந் தரமன்று. வீரமும் செல்வமும் வாய்ந்த வீமராஜனுக்கு ஒருதனிப் புதல்வியாய்ப் பிறந்து, எவ்விதக் குறைவுமின்றி அரசின்வரு நலங்களெல்லாம் அனுபவித்து அன்னையின் அன்பிற்கிடையே வளர்ந்தவள் இவள். அன்னவளை இந்திரனே விழைந்துவந்து நன்மணம் இரந்து வேண்டி

னன். அதனிற் கிணங்கிஇருப்பாளாயின் எவ்வகைப் பதவி எய்தியிருப்பாளென்பதை அதிவீரராம பாண்டியன் நைடதத்தில் வெகு அழகாகக் காட்டிவைத்தார். புகழேந்திப்புலவர் நூலின்படி, இந்திரன் நளனைமாத்திரம் தன் காதல்தூதனாகத் தமயந்தியிடம் அனுப்பினன். நைடதத்திலோ இந்திரனும் மற்றத்தேவர்களும் நளனைத் தூதாக அனுப்பியதோடு நிற்காமல், தூதிகள் சிலரையும் தமயந்தியின் காதலைப் பெற்றுவருமாறு அனுப்பிவைத்தனர். அவ்வாறு வந்த தூதிகளில் தேவேந்திரனுடைய தூதி, இந்திரன் அவள்மீது கொண்டிருந்த காதலின் மிகுதியை அவளுக்குக் கூறி, அதற்கவள் இணங்குவாளாயின் அவளுக்கு வாய்க்கக் கூடிய நலன்களின் சிறப்பைப் பின்வருமாறு எடுத்துக் காட்டினள்:—

தாதொடு நறவு தூற்றுந் தருநிழ லினிது வைகி
மேதகு நிதியு மானும் வேட்டன வுவந்து நல்க
ஏதமி லரம்பை மாதர் முறைமுறை யேவல் கேட்ப
நீதொழு மமரர் யாரு நிற்றொழப் பணித்தி யென்றாள்

“தமயந்தியே, மகரந்தப் பொடிகளோடு தேனையும் தூவுகின்ற கற்பகவிருக்ஷத்தின்நிழலில் இனிமையாய் அமர்ந்து, சிறப்புவாய்ந்த சங்கநிதி பதுமநிதிஎன்னும் இருநிதிகளும் காமதேனுவும்,நீவிரும்பியவைகளை மகிழ்ந்துகொடுக்க,பழிப்பற்ற தேவகன்னிகைகள் வரிசை வரிசையாக நின்று நீ இட்ட கட்டளைகளைச்செய்ய, இப்பொழுது நீ இங்கிருந்து, வருணனென்றும் வாயுவென்றும் தொழுகின்ற தேவர்களெல்லாம் அங்கு வந்து உன்னைத் தொழும்படி செய்துகொள்வாய்” என்பது இச்செய்யுளின் பொருள். இவ்வகைத் தாய இணையிலாப் பெரும்பேறுகளை எல்லாம் இந்திராணியாகித் தான் பெறுதற்கு மனங்கொள்ளாமல் தன்னுள்ளத்தே என்றும் நீங்காதிருந்த நளனுக்கே தன்னை உவகையோடும் அளித்தாள். அவனே, மாற்றியளித்த அன்பில் இவளுக்கு எள்ளளவும் குறைந்தவனல்லனாயினும், பொய்ச்சூதாடி அனைத்தையும் இழந்து தான் கெட்டதன்றியும் இவளையும் இந்நிலைக்குக் கொணர்ந்து பாம்பின் வாயிலும் தள்ளிவிட்டானென்னும்படி செய்துளான். சூதினை அவன் ஆடிய அக்காலத்தில் அருகிருந்தும் அவள் தடுக்காத கற்பின் திறத்தை முன் குறித்திருக்கின்றோம். (‘இனிச் சூது ஒழிந்தோம்,’ என்று நளன் தன்னை யறியாமலே, அவளும் அச்சூதாட்டத்தில் கலந்திருந்தவள்போல் பாராட்டியதனையும் பார்த்தோம்). எனினும் இங்குத் தமயந்தி தன்னைக் காப்பதற்குத் தெய்வத்தைத் துணையழைத்திலள். ஆடிய சூதினால் நகர்நீக்கிக் காட்டிற்குக் கொணர்ந்து, நள்ளிரவில் சோர்துயிலில் நீத்தகன்றவோர் நாயகன் கால்களின் நினைவையே பின்னுந் தொழுது இச்செய்யுளில் அவனைத் துணைக்கழைக்கின்றாள். புனிதமுடைய இவ்வனிதையின் பெருமைக்கு இணைதானும் ஏதேனுமுண்டோ!

வென்றிச் சினவரவின் வெவ்வா யிடைப்பட்டு
வன்றுயராற் போயாவி மாள்கின்றேன்—இன்றுன்
திருமுகநான் காண்கிலேன் றேர்வேந்தே யென்றாள்
பொருமுகவேற் கண்ணாள் புலர்ந்து. 120.

பதப்பிரிவு:—வென்றி சினம் அரவின் வெம்மை வாய்இடை பட்டு வல் துயரால்போய் ஆவி மாள்கின்றேன் இன்று உன் திரு முகம் நான் காண்கிலேன் தேர் வேந்தே என்றாள் பொரு முகம் வேல் கண்ணாள் புலர்ந்து.

பதவுரை.

பொரு - போர்செய்கின்ற
முகம் - முனையையுடைய
வேல் - வேலாயுதத்தைப் போன்ற
கண்ணாள் - கண்களையுடைய தமயந்தி,
புலர்ந்து - சோர்வடைந்து
“தேர் - தேர்களையுடைய
வேந்தே - அரசனே,
வென்றி - வெற்றிபொருந்திய
சினம் - கோபம்கொண்ட
அரவின் - பாம்பினது
வெம்மை - கொடிய
வாய் - வாயின்
இடை - நடுவில்
பட்டு - அகப்பட்டு
வல் - மிகுந்த
துயரால் - துன்பத்தோடு
ஆவி - எனது உயிர்
போய் - போய்
மாள்கின்றேன் - சாகின்றேன்.
இன்று - இன்றைய தினம்
உன் - உன்னுடைய
திரு - அழகிய
முகம் - முகத்தினை
நான் - நான் வொன்றே குறை)”
காண்கிலேன் - காணப்பெற்றிலேன். (அது
என்றாள் - என்று கூறினாள்.

விரிவுரை:—துணைக்கழைத்த நாயகன் வாராமையால் இனித்தான் பிழைப்பதற்கில்லையென்பது தமயந்திக்கு நிச்சயமாயிற்று. அதற்குள் பாம்பும் மேன்மேல் விழுங்க, அதன் வாயில் தன்னுடல் நொருங்குகின்ற வருத்தத்தைத் தாங்காமல் பின்னுஞ் சோர்வடைந்து, “ஆவிபோய் மாள்கின்றேன்” என முறையிட்டனள். உயிர்நீங்கும் தருணத்தில் மாந்தர் தத்தம் நெஞ்சத்திருந்த குறைகளைக் கூறுவது மரபு. தமயந்தியும் தன் குறை யாதெனக் கூறுகின்றாள். “மணம்புகுந்த நாள் முதல் இப் பன்னிரண்டு வருடகாலமும் ஒவ்வொரு இரவும், துயில்நீத்துக் கண்ணைத் திறந்தவுடன் நான் உன்முக தரிசனம் செய்யத் தவற நேர்ந்ததில்லை. இவ்வொரு நாளே எனக்கு அப் பாக்கியம் கிடைக்காமற் போயிற்று. அதுவும், சாகின்ற இந்நாளில்தானா நான் உன் முகத்தை ஒரு முறையேனும் காணாமற் சாதல் வேண்டும்!” என்று இரங்கி, இறப்பதன்முன் தன் குறையைக் கூறிக்கொள்கின்றாள் தமயந்தி.

இனி, சாகின்றவேளையில் வொருவருக்கிருந்த மனக்குறை அடுத்த பிறவியில் நிறைவடையும் என்பர். எனின், “இப்பிறவியில் நீ என்னைப் பிரிந்தாயானாலும் மறுபிறவியிலேனும் உன்னை என்கொழுநனாய் மீண்டும் பெறுதல்வேண்டும்” என்னும் ஓர் உட்கருத்தும் இதனில் அடங்கியிருக்கின்றது.

மற்றொடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள் பிரிந்தேகும்—கொற்றவனை
நீரேனுங் காண்குதிரோ வென்றழுதா ணீள்குழற்குக்
காரேனு மொவ்வாள் கலுழ்ந்து. 121.

பதப்பிரிவு:—மல் தொடுத்த தோள் பிரிந்தும் மாயாத வல்வினையேன் பெற்று எடுத்த மக்காள் பிரிந்து ஏகும் கொற்றவனை நீர் ஏனும் காண்குதிரோ என்று அழுதாள், நீள் குழற்கு கார் ஏனும் ஒவ்வாள் கலுழ்ந்து.

பதவுரை.

நீள் - நீண்ட
குழற்கு - (தன்) கூந்தலுக்கு
கார்ஏனும் - கார்மேகங்கூட [தமயந்தி.
ஒவ்வாள் - (நிறத்தில்) ஒப்பாகாதவளாகிய
கலுழ்ந்து - கலங்கி,
“மல் - வலிமை
தொடுத்த - பொருந்திய
தோள் - (என் நாயகன்) தோள்களை
பிரிந்தும் - பிரிய நேர்ந்தும்
மாயாத - (உடனே) இறவாத
வல் - கொடிய
வினையேன் - பாவியாகிய நான்
பெற்று - பெற்று
எடுத்த - வளர்த்த
மக்காள் - குழந்தைகளே,
பிரிந்து - (என்னைவிட்டுப்) பிரிந்து
ஏகும் - போகின்ற
கொற்றவனை - அரசனை
நீர் ஏனும் - நீங்களாவது [தெரியவில்லையே)”
காண்குதிரோ - பார்ப்பீர்களோ (என்னவோ
என்று - என்று
அழுதாள் - அழுதாள்.

விரிவுரை:—“நானே உத்தமியாயிருந்தால் நாயகன் பிரிந்துவிட்டான் என்பது தெரிந்தவுடன் எனது உயிர் அந்தக்கணமே தானாகப் போயிருக்க வேண்டாவோ! அப்படிப் போகாததற்குக் காரணம் நான்செய்த தீவினையே ஆதல் வேண்டும். தானாகப் போகாத வுயிரைத் தண்டிப்பதுபோல் இப்பொழுது பாம்பு விழுங்கிப் போக்குகின்றது. இவ்வளவு கொடியவளான என் வயிற்றில் பிறந்த பாவத்தால் மக்களே, நீங்களுங்கூட ஒருநாளும் நளனை இனிக் காணாமற்போய்விடுகின்றீர்களோ யாதோ, என்று அஞ்சுகின்றேன்” என்று தமயந்தி வருந்தினள் என்பது இச்செய்யுளின் கருத்து.

தான்தான் நளனைக்காணாமல் மாண்டாலும்,தன்மக்களேனும் பின்னாள் அவனைக் காண்பார்கள், என்னும் நினைவால் சிறிது மனந்தேற முயன்றபோது, “பாவியேன் வயிற்றில் பிறந்த அவர்களுக்குத்தான் அப்பாக்கியம் வருமோ!” என்ற ஐயத்தால் குலைந்து உருகுகின்றாள். எவ்வெவர்தீமையும் தன்னதேயாகப்பாராட்டும் பெருந்தகையுடையவள் இவள், நளன் நாடிழந்ததும் “தன்னுடைய கால் புகுந்தது” காரணம் என்றும், மக்கள் நளனைக் காணாராகில் அதற்குங் காரணம் “தன்வயிற்றில் பிறந்தது,” என்றும் தன்னையே பழித்துக் கொள்வாள். மற்று தன்னுடைய துன்பத்திற்குப் பிறர் காரணமாயினர் என்று எண்ணாமல் அதுவும் தன் வினையின் காரியமே எனக் கொள்வாள்.

திருக்குறள் நீதி

2. பொருட்பால்

அரசியல்

[870-வது பக்கத் தொடர்ச்சி]

13. தெரிந்து தெளிதல்.

1. அறமாதி யுபதையின் திறமாகுந் தெளிவு.
2. குற்றமில் லானைச் சுற்றமாய்த் தெளிக.
3. கற்றோ ரிடத்துங் குற்றங்கள் காணலாம்.
4. குணநல மிகுதியான் துணைநல மாகும்.
5. பெருமைக்குஞ் சிறுமைக்குங் கருமமே கரியாம்.
6. சுற்றமில் லாரைப் பற்று தொழிக.
7. காதலாற் றெளியின் பேதைமை பயக்கும்.
8. தேராமல் தெளிந்தாற்குத் தீரா திடும்பை.
9. தேறற்க தேராமல், தேர்ந்தபின் ஐயிர்க்கற்க.
10. தெளிந்தான்க ணையந் தீரா விடும்பை.

14. தெரிந்து வினையாடல்.

1. நலன்தெரி வினையின் பலன்குறி யரசு.
2. வாரி வளம்பெறக் கோரிவினை செய்க.
3. அன்பறி வவாவில் தேற்றமுடன் முயல்க.
4. மாறின்றித் தேறினும் வேறுவா றுண்டு.
5. அறிந்துவினை யாற்றுகை தெரிந்தேவல் கொள்ள [ற்க.
6. செய்வான் செயல்கால மெல்லா முணர்க.
7. இதிதிதனா லாமெனின் அதுதவன்கண் விடுக.
8. வினைக்குரிமை நோக்கி அதற்குரிய னாக்குக.[கும்
9. வினைக்கேண்மை வேறுக நினைப்பானைத் திருநீங்
10. நாடோறும் வினைநாடின் கேடாகா துலகம்.

15. சுற்றந்தழால்.

1. அற்ற விடத்துஞ் சுற்றமே அணுகும்.
2. விருப்பறாச் சுற்ற மறுப்பறாச் செல்வம்.
3. சுற்றமில் வாழ்க்கை முற்றிலும் பாழே.
4. சுற்றந் தழுவாதார் பெற்றென்ன செல்வம்.
5. இன்சொ லுட னீவார்க்கே அன்பாகுஞ் சுற்றம்.
6. தண்ணளி யுடையார்க் கெண்ணற்ற சுற்றம்.
7. ஆக்கம் பெருகில் காக்கையொத் துண்க.
8. பிரியாது சுற்றம் வரிசையாய் நோக்கின்.
9. குறைகண்டு பிரியினும் நிறைகண்டு சேர்வார்.
10. குற்றங் கடிந்தே உற்றவ னாக்குக.

16. பொச்சாவாமை.

1. கோபத்திற் கொடிதே போகத்தின் மறவி.
2. பொச்சாப் பார்க்கு இலச்சையுண் டாகும்.
3. மறவிக்குப் புகழில்லை உறுதிநூற் றுணிபு.
4. பொச்சாப் பில்லார்க் கச்சமே மில்லை.
5. முன்னுறக் காவான் பின்னிருந்து வாடும்.
6. இழுக்காமை வழுக்காமை விழுச்செல்வ மாகும்.
7. சோராத முயற்சிக்கு நேராத தென்னே.
8. நூன்முறை மறந்தார் சீலம் பெறுரே.
9. மகிழ்ச்சி யுறுங்கா லிகழ்ச்சியை எண்ணுக.
10. மறவா முயற்சியான் பெறலரி தில்லை.

17. செங்கோன்மை.

1. ஓரமில்லா நடுநிலை நேரான செங்கோல்.
2. வானோக்கு முயிரென்னக் கோனோக்குங் குடிகள்.
3. மறையறம் நிறுவப் பெறுவதே செங்கோல்.
4. குடிதழுவு மன்ன னடிதழுவு முலகு. [லை.
5. முறைகுன்றாக் கோலுக்குக் குறையொன்று மில்
6. நூல்நின்று காப்பானைக் கோல்நின்று காக்கும்.
7. கோல்கோடு மன்னர்க்கு வேல்வெற்றி யில்லை.
8. ஆய்ந்துமுறை செய்யான் மாய்ந்துகெடுந் தானே.
9. துட்ட நிக்கிரகம் நிட்டையா மிறைக்கு.
10. களைகளைவ தாகும் பிழைகளைவ திறைக்கு.

18. கொடுங்கோன்மை.

1. குடியலைக்கு மரசன் படுகொலைய னாவான்.
2. பழிநாணா வரசன் வழிப்பறி கள்வன்.
3. இறைமுறைசெய்யானேல்நாடோறும்நாடுகெடும்.
4. கோல்கோடு மரசன்பால் கூழ்குடிகள் நில்லா.
5. ஏழையர்தம் கண்ணீர் கூழ்தேய்க்கும் வாளாம்.
6. செங்கோன்மை யற்றால் மங்குமா மரசு.
7. துளியற்ற வுயிரொக்கு மளியற்ற செங்கோல்.
8. வல்லரசன் கீழ்ச்செல்வர் அல்லலுக்கே ஆளாவார்
9. கோன்முறை குன்றில் வான்முறை குன்றும்.
10. காப்பவன் கோல்குன்ற ஆப்பயன் குன்றும்.

19. வெருவந்த செய்யாமை.

1. திருத்துங் கருத்துட னொறுப்பவன் வேந்து. [து
2. தண்டிப்பான் போன்றுபின் கண்டிப்பான் வேந்
3. குடியஞ்சக் கோலோச்சி னிடிவந்து வீழும்.
4. குடிதிட்டும் வேந்தின் முடிதட்டி வீழும்.
5. காய்ந்துசீறும் வேந்திற்குமாய்ந்துகெடும்செல்வம்
6. ஈவிரக்க மில்லாப் பாவிபணம் பாழாம்.
7. கொடுமொழித் தண்டம் அடுமுரண் தேய்க்கும்.
8. ஆய்ந்து செய்யான்செல்வம் மாய்ந்துபோமென்க.
9. அரண்செய்யா வேந்தன் சிரம்வீழும் விரைந்து.
10. கல்லாதார் கூட்டம் பொல்லாப் புவிப்பொறை.

20. கண்ணோட்டம்.

1. கண்ணோட்ட முண்மையால் மன்னுமிவ் வுலகு.
2. கண்ணோட்டமில்லாதான் மண்ணிற் சுமைபாகும்
3. கண்ணோட்ட மற்றகன் கண்ணுவ தில்லை.
4. கண்ணோட்ட மற்றகண் புண்ணும் முகத்தே.
5. தாட்சண்ணிய மற்றகண் மாட்சியின் றாகும்.
6. கண்ணோட்ட மற்றவர் கண்பெற்ற மரமாவார்.
7. கண்ணோட்ட மற்றவர் மண்மேற் குருடர்.
8. கருமஞ் சிதையாதே கண்ணோட்டல் நன்று.
9. பொல்லாது சூழ்வார்க்கும் நல்லதாங் கண்ணோட்
10. நட்டான் நஞ்சீயினும் நாகரிகன் தட்டான். [டம்.

21. ஒற்றாடல்.

1. ஒற்று முரைநூலுங் கொற்றவ னயனம்.
2. ஒற்றனா லறிதல் கொற்றவன் தொழிலாம்.
3. ஒற்றினாற் றேறான் வெற்றியோ அடையான்.
4. உறவுவினை நட்பின் திறமாய்வோ னொற்று.
5. ஐயுற் றறியின் மெய்விடா னொற்றன்.
6. தண்டத்தே யாயினு முண்டென்னா னொற்றன்.
7. வல்லார்வாய் நல்லார்வாய் எல்லாமாய் வானொற்
8. ஒற்றன் கூற்றை மற்றொற்றா லொற்றுக. [றன்.
9. மூவொற்றார் றனித்தனி யாய்வதே யுறுதி.
10. ஒற்றுக்கு வெகுமான மற்றார்க்கு முரையற்க.

22. ஊக்க முடைமை.

1. ஊக்க முடையானே யாக்க முடையான்.
2. ஊக்கம் நிலைக்கு மாக்கமோ வழியும்.
3. ஆக்க மிழப்பினு மூக்கம் பேணுக.
4. ஊக்க முடையானை யாக்க மணுகும்.
5. எனைத்ததே யூக்க மனைத்ததே யுயர்வு.
6. முயற்சியே கண்ணா யுயர்ச்சியே எண்ணுக.
7. உயர்ச்சி கெடினு முயற்சியே வேண்டும்.
8. முயற்சி யுடையா ரிகழ்ச்சி யடையார்.
9. ஆக்கமும் வலியு மூக்கமிலார்க் கில்லை.
10. ஊக்க மற்றான் நோக்கின் மரமே.

23. மடியின்மை.

1. குடியினைக் கெடுக்கும் மடியெனு மாசு.
2. மிடியினு முயற்சியே குடியை யுயர்த்தும்.
3. மடிவழி நிற்போன் குடிமடிந்து போகும்.
4. மடியின் மிடியே குடிப்பழி பெருக்கும்.
5. நெடுநீண் மறவி கெடுவா ரணிகலன்.
6. நிதிநிலம் மீயினுங் கதிபெறார் சோம்பர்.
7. இடித்திக ழப்படும் மடிக்குண முடையோன்.
8. குடியின்கண் மடிமை அடிமை யாக்கும்.
9. குடியாண்மைக் குற்றம் மடியின்மை போக்கும்.
10. சோர்வில்லா மன்னன் பாரெல்லாம் பெறுவான்.

24. ஆள்வினையுடைமை.

1. தளரா நெஞ்சந் தன்வினை முடிக்கும்.
2. தொட்டதொழி லாற்றானை விட்டுலகம் நீங்கும்.
3. வேளாண்மை வேண்டின் தாளாண்மை வேண்டுக.
4. தாளாண்மை யில்லார்க்கு வேளாண்மை யில்லை.
5. இன்பங் கருதான் மன்னுயிர் காப்போன்.
6. செல்வங் கொடுக்குஞ் சீரிய முயற்சி.
7. பெருமுயற்சி யுடையானைத் திருவந்து சேரும்.
8. விதிகொடி தாயினும் வினைப்பற்று வேண்டும்.
9. மெய்யது வருந்தப் பொய்யாப் பலன்தரும்.
10. ஆள்வினை யுடைமை யூழ்வலி போக்கும்.

25. இடுக்கணழியாமை.

1. இடுக்கண் வருங்கால் மகிழ்ச்சி யுறுக.
2. எத்தனைத் துன்பமும் வித்தகர்க் கில்லை.
3. துன்பத்துட் டுன்புறார் துன்பமே துன்புறும்.
4. இடுக்கணஞ்சா வினையி னிடுக்க ணிடர்ப்படும்.
5. உறுதியுள்ளா னிடுக்கண் ணிறுதிகண்டு வாடும்.
6. உள்ளபோ தீவா ரில்லையென்று நோகார். [டார்.
7. இடும்பை யுடம்பறிந்தா ரிடும்பைக் குடைந்தி
8. இன்பம் வேண்டார்க்குத் துன்பென்ன செய்யும்.
9. இன்பம் விரும்பாரைத் துன்பஞ்சே ராது. [பர்.
10. துன்பமே இன்பமென்பாரைத் துன்னாரும் மதிப்

அரசியல் முற்றிற்று.

அறிக்கை:—கலாநிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

குடி வாழ்க்கை

[Plato's Republic]

[867-வது பக்கத் தொடர்ச்சி]

ஒருநாட்டின்கண் அரசியல் முறையும், சமுகநெறியும் மாந்தர் வாழ்க்கையும் தந்நிலைகெட்டு இழிந்த விதம் இதுவென இதுவரைக் கூறிவந்தேன். இவ்விழிவினிற்கு மற்றோர் காரணமும் உளது. அது மிகவும் முக்கியமான காரணம்.

சந்தோஷத்தை எய்தவேண்டுமென்பதே முடிவான மானுடநோக்கம். மனித அமைப்பில் மூன்றுவிதமான முக்கியஅம்சங்கள், மூன்றுவிதமான இயற்கைகளாய் இயங்கி மானுடநோக்கமான சந்தோஷத்தைப் பெற முயல்கின்றன. அறிவு (Reason), அவா (Passion), இச்சை (Desire) ஆகியஇவைகளே மேற்கூறிய மூன்று மூலஅம்சங்கள். கடையான இச்சை (Desire) என்பது, ஸ்தூலமாய சிற்றின்பங்களையே சாரமெனக்கொண்டு விவகரிக்கும் இயல்புடையது. இரண்டாவதான அவா (Passion) பேரினும் புகழினும் பற்றுவைத்து விவகரிக்கும் தன்மையது. முதல் இனத்ததான அறிவானது விஷயத்தின் வாய்மையைத் தேடித் தெளிந்து வாழ்கின்ற நோக்கமுடையது. அது, பொருளையும் புகழையும் மதிப்பதில்லை.

மேற்கூறிய இம்மூன்று மூல அம்சங்களும் அவ்வவ் அம்சங்களின் இயல்பினிற்குரியபடி மனிதனுக்குச் சந்தோஷத்தை மூவ்வேறு முறைகளில் தருகின்றன. அவைகளில் எந்த அம்சம் ஒருவனிடம் அதிகமாய் இருக்கின்றதோ அதனது இயல்புவழியே மனிதன் பயில்கின்றவனாகின்றான். இன்னபடி மூவ்வேறு அம்சங்களால் இயக்கப்பெறும் இம்மூன்றுவிதமான இயற்கைகளையுடைய மனிதர்களை அழைத்து, 'உங்களில் எவர்சிறந்தவர்' என்று கேட்போமாயின், ஒவ்வொருவனும்தனது இயற்கையே சிறந்தது என்றும், சந்தோஷம் அதனிற்றான் இருக்கின்றதென்றும் கூறுவான். சிற்றின்பத்திலும் பொருளீட்டுதலிலும் நோக்கமுடைய மூன்றாவது இனத்தவன், அறிவினது பயனற்ற தன்மையையும், அதற்கெதிர் பொருளுடைமையால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்து நெடிது பேசுவான். இரண்டாவது இயற்கையுடையவன், 'பேரினிற்கும் புகழினிற்கும் உதவாதெனின் அறிவினால் யாருக்கும் எப்பயனுமில்லை. அந்த வீண் அறிவு யாருக்குவேண்டும்' என்று கூறுவான். அறிவினால் இயக்கப்படும் முதல் மனிதனோ, விஷய வாய்மையைத் தெளிவதே வாழ்வின் பயனென்றும், மற்றவை ஒருகால் வாழ்க்கைக்கு அவசியமாயிருக்கலாமெனினும், முடிவான நன்மையை வாழ்க்கைக்கு அவை ஒருநாளும் அளிக்கமாட்டாவென்றும் உறுதியாய்க் கூறுவான்.

மூன்றுவிதமான இயற்கைகளையுடைய இவர்களில் சிறந்தவன் யாவன்? இவர்களில் எவன் அகன்ற அனுபவத்தையும், உண்மையான அறிவையும் உடையவன்? அறிவினில் வளர்பவன், தனது இளமையனுபவத்தினால் 'சிற்றின்பம், பேர், புகழ்' என்பவற்றால் ஏற்படும் சந்தோஷத்தை ஆராய்ச்சிசெய்து அறிகின்றான். அறிந்து, விஷயவாய்மை கைவரப்பெறுவதால் விளைகின்றவொரு எல்லையற்ற இன்பத்தின்முன் மற்ற இரண்டும் பொருளற்றதாகிவிடுந் தன்மையன என்பதைத் தெரிந்துகொள்கின்றான். அவனுக்குப் 'பேர், புகழ்' என்றபெருமையும் இல்லாமற்போகவில்லை. அவன்தான் உண்மையான வாழ்வினை (True Being) தெரிந்து வாழ்பவன். எனவே மனிதப்பெருமையை நிர்ணயிப்பதற்குரிய கருவி அவனே ஆகின்றான். அவனைக்கொண்டு மற்றவர் அளக்கப்படுவார்களேயன்றி, மற்றவர்களைக்கொண்டு அவனை யளப்பதென்பதெந்நாளுமில்லை. இது அவனுக்குப் பெருமையைத் தாவில்லையா? அவன் பெருமையென்றவொன்றை நாடுவதில்லை; எனினும் பெருமையை அளக்கும் கருவி அவனாகி அமைகின்றவொரு பெருமையோ அவனுக்குரியதாகின்றது. ஏனெனின் அம்மேன்மையோனது கருவி அறிவு. மற்றவர்கள் கையாளும் கருவிகள் சிறு பொருளும், புகழ்ச்சி அவாவுமாகின்றன. எனவே அவனது பெருமையே உண்மையானது. மனிதனதுமுதல் அம்சமான அறிவினது இயக்கத்தால் பெறப்படும் சந்தோஷமே களங்கமற்ற நிறைவுடைய சந்தோஷம். அவன்தான் நிர்ணயத்தின் நிர்ணயம். மற்ற இரு இயல்புடையவர்களும் இழிந்தவர்களே. வித்தகத்தில் பிறக்கின்ற சந்தோஷமே உண்மையான சந்தோஷம், மற்றவெல்லாம் நிழலைப் பொருளென்று கொள்ளும் மயக்கமே தான்—என்று ஒரு பெரிய வித்தகர் என் காதிலே ஓதுகின்றார்.

பொதுவாக நாம் துன்பம் இல்லாதநிலையைச் சுகம் என்றும், சுகநிலை அகல்வதைத் துன்பம் என்றும் கொள்கின்றோம். ஏனெனில், இந்திரியங்களைக்கொண்டு இவற்றை நாம் அளப்பதால் ஏற்படும் கொள்கை இது. எனின், இருக்கின்ற ஒரு துன்பம் அகல்வதைச் சுகம் என்று கொள்ள நேர்கின்றது. இத்துன்பத்தின் துணையில்லாத இன்பம் உலகத்தில் உண்டு. அதுதான் ஆன்ம சந்தோஷம். அது ஊறுகின்ற அறிவினில் ஏற்படுவதால், எத்துணையும் துன்பம் இல்லாத நிரந்தர இன்பத்தை நல்குகின்றது. உலகத்திலே பற்றுவைத்து விவகரிப்பவர்களுக்கு, உண்மையான சந்தோஷநிலை என்பதொன்று கைகூடுதல் அருமை. உலகத்தைப் பற்றினவர்தம் சந்தோஷத்தில் துன்பத்தின் கலப்புண்டு. நோயில்லாநிலையின் சுகம் நோயுற்றகாலையில்தான் தெரியவருகின்றது. வித்தக இன்பமோ துன்பக் கலப்பில்லாதது, தூய்மையும் உடையது.

இத்தூய்மையான வித்தக நிலையினால் ஏற்படும் சந்தோஷம் மற்றிரு இனத்தவர் இயற்கையில் இல்லை. எனவே அவாவினாலும் இச்சையினாலும் இயக்கப்படும் சிற்றினத்தவர், நிழலையெல்லாம் சந்தோஷத்திற்குரியவைகள்என்று தொடர்ந்து திரிகின்றனர். அவா இச்சை என்னும் இரு இயற்கைகளும் இளைஞர்களைச் சேராவண்ணம் காத்தல் அவசியமாகும். அன்னதற்குத் தன்னடக்கம் (self restraint) தருகின்ற கல்வியை அவர்கள் பயிலவேண்டும். இத் தன்னடக்கம் என்னும் உயரிய தத்துவம் தம் வாழ்வினில் கைவரப்பெற்றவர்களே சீரிய வாழ்வைப் பெறுவர்.

நாளுக்குநாள் ஒருவன் தீயவன் ஆவானேல் அவன், உலகமெல்லாம் கட்டியாள்வதானாலும், அவன் அடைந்த பயன்தான் என்னே! ஒருபயனும் இல்லை. அறிவையே வித்தகமுடையவன் மிகவுயர்ந்த பொருளாக

எண்ணுவான். பொருளீட்டப் புகுமிடத்தும் அவனுக்கு ஓர் ஒழுங்கும் முறையும் உண்டு. பணத்தைக்குவியலாகச் சேர்த்துவைப்பதை அவன் விரும்பமாட்டான். ஏனெனில், இப்பொருள் அவனது ஆன்மாவைக் குலைத்துவிடும் தன்மையது என்பது அவனுக்குத் தெரியும். பேரையும் புகழையும் அவன் நாடமாட்டான். அவை வரப்பெறினும், தன்னை மேன்மேலும் வளர்க்கும் அளவிலேயேதான் ஏற்பான். தன் நல்வளர்ச்சிக்குக் கேடாக அவை அமையும் என்று தோன்றுமேல் அப் பேரும் புகழும் தன்னைவந்து சாராமல் காத்துக் கொள்வான். அதாவது, சுருங்கச் சொல்லின், அவன் ஒருநாளும் அரசியல்வாதியாய் (Politician) மாற மாட்டான்."... என்று சாக்ரிடீஸ் கூறுகையில், அவரோடு வார்த்தையாடிக்கொண்டிருந்த நண்பர் ஒருவர், 'நீர் கூறும் இந்நோக்கத்தைத் தழுவிய நாட்டில் (Ideal city)-அதாவது, இந்தப் பூலோகத்தில் இருப்பதென்பதே இயலாத ஒரு நாட்டில்தான்—அத்தகைய ஒருவன் இருப்பான் என்பது உங்கள்கருத்தோ' என்று கேட்க, "ஆம், பூலோகத்தில் இருக்க இயலாததாகவே போகலாம் அந்நாடு. எனினும் அதனை இவ்வுலகிற் கழைத்தமைக்க விரும்புபவர் அத்தகைய நாட்டின் அமைப்பினிற்குரியபடி தம் வாழ்க்கையைத் திருத்திக்கொள்வார். நான் வகுத்த முறையைத் தழுவிய ஒருநாடு இருக்கலாம் அல்லது இல்லாமற் போகலாம், அதுபற்றி நமக்குக் கவலையில்லை. வித்தகமுடையவன் அத்தகைய நாட்டின் முறைக்குரியபடி நடந்துகொள்வானேயன்றி, வேறு எவ்வழியும் நாடமாட்டான்.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[875-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 5, களம் 4.

போர்முழக்கத்தினிடையே; இருதிறத்துப்படைஞரும் பொருதனராய் வருகின்றனர். பிறகு, ப்ரூட்டஸும் கேட்டோவும், லூஸிலியஸ்ஸும் மற்றவர்களும் வருகின்றனர்.

ப்ரூட்டஸ்:—இன்னமும் என் சுதேசிகாள், ஹோ! இன்னமு முங்கள் தலைகளை நிமிர்த்தி நில்லுங்கள்.(1)

கேட்டோ:—எந்தக் குண்டகன் அது செய்யமாட்டாதவன் (2)! என்னுடன் யார் வருவார் (3)? என்னுடைய பெயரினை இந்தக் களம்முழுவதும் விளம்புவேன்—மார்க்கஸ் கேட்டோவின் புத்திரன் நான், ஹோ! (4). கொடியோர்க்குப் பகைவன், என் நாட்டின் நண்பினன். ஹோ! மார்க்கஸ் கேட்டோவின் புத்திரன் நான்!

[பகைவரை எதிர்க்கின்றான்]

ப்ரூட்டஸ்:—நானே ப்ரூட்டஸ், மார்க்கஸ் ப்ரூட்டஸ் நான். ப்ரூட்டஸ், என் நாட்டின் நண்பினன்; என்னை ப்ரூட்டஸ் என்று அறியுங்கள். (5).

[பகைவரை எதிர்த்தனனாய்ப் போகின்றான். கேட்டோவைப் பகைவர் சூழ்ந்தெதிர்க்க, அவன் விழுகின்றான்]

லூஸிலியஸ்:—ஓ வாலிபப் பெருந்தகை, கேட்டோ! நீயும் சாய்ந்தனையோ? எனினும் டிடினியஸ்ஸைப் போல் இன்று நீ வீரமுடன் மாள்கின்றாய். கேட்டோவின் நன்மகனா முனக்கு இதனாற் பெருமையே எய்தும். (6)

முதற்படைஞன்:—இணங்குவாய், அல்லையேல் இறக்கின்றாய். (7).

லூஸிலியஸ்:—இறப்பதற்கே யான் இணங்குகின்றேன் (8). என்னை நீ நேராகக் கொன்றுவிடுதற்கு இதோ இத்தனை உளது. [பணப்பையை நீட்டுகின்றான்]. (9). ப்ரூட்டஸ்ஸைக் கொன்று அவன் மரணத்தின் பெருமையைப் பெற்றுக்கொள். (10).

முதற்படைஞன்:—நாங்களது செய்யலாகாது. மாண்புடன் உன்னைச் சிறையே கொள்வோம்.

ப்ரூட்டஸ் துவக்கிய மறுபோரின் முடிவை இந்தக்களம் காட்டுகின்றது. ப்ரூட்டஸின் சைனியம் தோல்வியுற்றுப் பகைவர்முன் நிற்கமாட்டாமல் ஓட அவர்களை ஆண்டனியின் படைஞர் துரத்துகின்றனர். அச்சமயத்தில் ப்ரூட்டஸ் முதலானவர்கள் வந்து தைரியம்சொல்கின்றனர்.

(1) தோல்வியால் தளர்ந்து ஓடுகின்றவர்களை நோக்கி, இன்னமும் நீங்கள் பயம்நீங்கித் தலைநிமிர்ந்து நிலைநிற்பீர்களாயின் வெற்றியே பெறுவோம். ஆதலின் ஓடாதீர்"—என்று ப்ரூட்டஸ் வேண்டிக்கொள்கின்றான்.

(2) குண்டகன் - விபசாரம் செய்து பெற்ற பிள்ளை. இப்பொழுது பகைவரை எதிர்த்துநிற்காதவன் விபசாரிக்குப் பிறந்தவனே அல்லாமல் தகப்பனுக்குப் பிறந்தவனல்லன்-என்று வைகின்றான்.

(3) என்னுடன் சேர்ந்து பகைவரைச் சென்று எதிர்க்கத் துணிபவர் இங்கு இருப்பீராயின், வாருங்கள்—என்பது பொருள்.

(4) இந்தக் கேட்டோவின் தந்தையின் பெயரும் கேட்டோ. அவன் உரோமப் பெருமக்களில் ஒருவனாய் நன்கு மதிக்கப்பெற்றிருந்தவன். போர்ஷியாவின் தந்தையும் அந்தக் கேட்டோவே.

(5) தங்கள் தறுகண்ணாண்மையைத் தெரிவிக்க அவரவர் பேர்களை விளம்பிக்கொண்டு பகைவர்களை எதிர்க்கின்றனர்.

(6) கேட்டோவின் புத்திரன் என்பதற்கிணங்க, பகைவரை எதிர்த்துப் பொருது இரணகளத்தில் உயிர் துறந்த இதனால் உனக்குப் பெருமையே அதிகமாகின்றது—என்பது பொருள்.

இரண்டாம் படைஞன்:—ஹோ! இடம் விடுங்கள். ப்ரூட்டஸ் சிறைப்பட்டான் என்பதை ஆண்டனிக்குச் சொல்லுங்கள்.

முதற்படைஞன்:—நானே இச் செய்தியைச் சொல்வேன்—மற்று, இதோ, நம் தலைவனே வருகின்றானே.

[ஆண்டனி வருகின்றான்]

ப்ரூட்டஸ் சிறைப்பட்டான், எம்பெரும, ப்ரூட்டஸ் சிறைப்பட்டான்.

ஆண்டனி:—எங்குளனவன்? (11).

லூஸிலியஸ்:—பத்திரமாயிருக்கின்றான், ஆண்டனி; போதிய பத்திரமாயிருக்கின்றான் ப்ரூட்டஸ். பகைவனொருவனும் ப்ரூட்டஸை உயிருடன் பற்றமாட்டானென்பது உறுதி. அப் பெரிய பரிபவத்தினின்று கடவுளர்களே அவனைக் காப்பார்கள். உயிருடனோ இறந்துபட்டோ அவனை நீ காணுங்கால், ப்ரூட்டஸ் தானாகவேதான் காணப்படுவான் (12).

ஆண்டனி:—நண்ப, இவனல்லன் ப்ரூட்டஸ். ஆயினும், இப்பரிசு அதனினும் குறைந்த மதிப்புடையதன்று நிச்சயம் (13). இவனைப் பத்திரமாய் வைத்துக்கொண்டு எல்லா அன்புடனும் ஆதரியுங்கள். இத்தகையவர்களை என் பகைவராய்க் கொள்வதனினும் நண்பராய்ப் பெறுதற்கே விழைகின்றேன். போங்கள். ப்ரூட்டஸ் இருக்கின்றனனோ மாண்டனனோ பாருங்கள்; எல்லாம் எவ்வாறு நேர்ந்தனவென என்று எமக்கு ஆக்டேவியஸ் கூடாரத்தில் செய்தி கொண்டுவாருங்கள்.

[போகின்றனர்]

(7) அச்சமயத்தில் பகைப்படைஞர் லூஸிலியஸ்ஸைச் சூழ்ந்துகொண்டு, "கத்தியைக் கீழேபோட்டுச் சிறைப்பட்டவனாய் எங்களுடன் வாராயாகில், இப்பொழுதே உன்னைக் கொன்றுவிடுவோம்"—என்று கூறுகின்றனர்.

(8) மாள்வேனேயொழிய உயிருடன் நான் ஒருபோதும் உங்களுக்குச் சிறைப்படமாட்டேன்—என்பது பொருள்.

(9) என்னைச் சிறைப்பற்றாமல் உடனே கொன்றுவிடுவாயானால் இதோ இவ்வளவு பணத்தையும் நீ எடுத்துக் கொள்ளலாம்—என்பது பொருள்.

(10) தானே ப்ரூட்டஸ் என்று பொய்யாகச் சொல்கின்றான் லூஸிலியஸ். இதனால், ப்ரூட்டஸ்ஸைக் கொன்றுவிட்டதாக இவர் போய் ஆண்டனியினிடம் சொல்வார்களானால் அதன்பின் அவர் இனிப் போர் முடிந்துவிட்டதென்று போய்விட, ப்ரூட்டஸேனும் உயிர்தப்பட்டும் என்ற நல்லெண்ணத்தால் செய்கின்ற சூழ்ச்சிஇது. "இந்தப் பணத்தைப் பெறுவதன்றியும் ப்ரூட்டஸைக் கொன்றவன் என்னும் பெருமையும் உனக்கு வாய்க்குமாகையால் உடனே என்னைக் கொன்றுவிடு"—என்பது பொருள்.

(11) தனக்கெதிரே லூஸிலியஸ்ஸே இருப்பது கண்டு, ப்ருட்டஸை வேறு எவ்விடத்திலோ சிறைகொண்டு வைத்திருக்கின்றனர் என்றெண்ணி இவ்வாறு கேட்கின்றான்.

(12) தானாகவே தான் - உயிருடனாயின், வீரமுடன் பொருதவண்ணமாயும், இறந்தானாயின், மார்பிலேபட்ட புண்ணுடனுந்தான் நீ ப்ரூட்டஸைக் காண்பாய்—என்பது பொருள்.

(13) இவனைச் சிறைப்பற்றியதும், ப்ரூட்டஸைப் பற்றியதுபோன்றே சிறப்புடையது—என்பது பொருள்.

நான்காம் களம் முற்றிற்று.

பொதிகை நிகண்டு

[871-வது பக்கத் தொடர்ச்சி]

ணகர வெதுகை

மணம்வெறிவேட் டிடல்புணர்வாம் பணமகிபொன் பையா
மணியழகு கண்டைநவ மணிகருமை நன்றாங்
கணமுடுநோய் துடிதிரட்சி பேய்வலையங் கணமாங்
கணியளவு வேங்கையதாம் புணர்விசைதல் சேர்வாம்
குணமியல்பு கயிறுபண்பு கும்பம்வின்னா ணம்பேர்
குணில்கடிப்புக் குறுந்தடியாந் திணையொழுக்க நிலமாம்
உணர்வறிவு தெளிவூட லொழித்தலென மூன்றா
மோணநதி மாயோனா ளாமெனுந்தா ரணியே. 392.

அணியழகு நிரைசெய்யுட் கலனணவல் படையாம்
அணையேசெய் கரைமெத்தை யடுதல்வாத் தியமாம்
பணிகருவி யரவுதொழில் பூண்வார்த்தை பணிவாம்
பணைவயல்வேய் பரிப்பந்தி படுத்தல்மரக் கொம்பாந்
துணிகடிகை சோதியா நுணவைசக்கை மாவாந்
துணையிரட்சை யிரண்டாகுங் கணைதிரட்சி யம்பாம்
பிணிமுகம்புள் மயிலாகும் பணவைபரண் பேயாம்
பிணைதொடர்பு விலங்கின்பெண் விருப்பமா மணங்கே.

அணங்குநோ யழகாசை துயர்கொலைபெண் ணணங்காம்
ஆணமன்பு குழம்பாகு நாணிலச்சை கயிறாந்
துணங்கறலே யிருள்விழவாந் துணங்கைநாட் கூத்தாந்
தூணியம்புக் கூடளவாம் வாணமறை வம்பாங்
குணுங்கர்குயி லுவரிழிஞர் தோற்கருவி யோர்பேர்
கோணலே கோண்வளைவு மாறுபா டாகும்
வணங்கல்பணி வளைந்திடலாங் குணங்குபேய் குணக்காம்
வாணிபா ரதிகூத்து வார்த்தையம்பாங் காணே. 394

காணநிதி செக்கொருகண் ணோர்பரியூண் கொள்ளாங்
காணியெண்ணோ டாட்சியதாங் கோணியன்றி முடனும்
பாணமம்பு குறிஞ்சிபட்டாம் வேணிசடை விசும்பாம்
பாணிகைபற் றோசைநீர் நகர்கான்போ தியமாம்
ஆணைமுறை மெய்யேவல் வெற்றிசூழ் தடைப்பேர்
ஆணிதான் வயிரமழ கெழுத்தாணி திறனும்
ஏணியெல்லை யுலகிறைவை மான்பழுவே ணியுமாம்
யாணர்நலம் புதிதழகு தச்சரண்ட ராமே. 395.

அண்டரே பகைவர்வா னோரிடையர் முப்பேர்
அண்டம்வெளி முட்டையாஞ் சுண்டனெலி நாளாம்
புண்டரமே நுதற்குறியுங் கழுகுமிரு பேராம்
புண்டரீ கம்புலிதிக் கானைகுஞ்சம் வண்டாம்
பிண்டமுடல் பெலிபிச்சை யுரைபிரம மறையாம்
பேணல்பே ணுதல்குறிப்பாஞ் சேணீள முயர்வாங்
குண்டலிபாம் பிசங்காகுங் கண்டல்கைதை முள்ளாங்
கொண்கனா யகன்சேர னென்பதுகண் டனரே. 396.

கண்டநவ கண்டம்வயல் கழுக்காணி கடிகை
கவசமிடு திரைவெல்லங் கரிக்கயிறு துன்பாங்
குண்டலம்வான் குழையாகுங் கொண்டல்முகில் காற்றாங்
சொண்டைமுடி யோர்கனியாங் குண்டைசட்டி யேறாந்
துண்டமுக நாசிதுணி சாரைப்பாம் பாகுந்
தொண்டைமிட றானையின்கை கோவையொரு நாடா

188180

முண்டகமத் தகந்தாழை முளரிமது முள்ளி
 முள்ளுடைய மூலமறு பேரெனவிண் டனரே. 397.

விண்டுமலே வேய்காற்று மேகமா லேந்தாம்
 விண்முகில்வான் சுவற்கயாங் கண்ணிடம்வேய் வழியாம்
வண்டுவளை யளிபூச மம்புரி வெண்மை
 மாசுவலம் புரிமகளி ராடலொன்பான் பேராந்
தண்டமெழும் கரிவழிதண் டனைபார நான்காந்
 தண்டியாழ் தடிபடை குழாயோந்தி யைந்தாம்
அண்டசாண் டுடும்பரவு காவோந்தி தவளை
 யானைமீ ஞமைபரி பல்லிபுட்பே ருண்டே. 398.

உண்டைதிரள் பிச்சைபடை யுறப்பாகு முப்பேர்
 ஒண்மையறி வொழுங்கழகு மிகுதிநன்மை யைம்பேர்
சுண்டைமதுச் சுண்டையாங் கண்டகமுள் வாளாந்
 தொண்டொன்பான் பழமைசுக்குத் தொழும்புநுழை
மண்டலிமண் ணேய்பாம்பு பூனையிறை நாற்பேர் [வழியா
 மண்டலந்தட் டேர்கோள்மண் டலங்குதிரை நாடாஞ்
சண்டனலி கால்வெய்யோன் பிண்டிதரு மாவாந்
 தண்ணமழு வொருபறையாம் பண்ணமரு மொழியே.

பண்ணிசைமாக் கலனையாம் அண்ணல்பெரி திறையாம்
 பண்ணைவயல் நீர்த்தாழ்வு மருதஞ்சேக் கையுயாம்
மண்ணணுவொப் பனைமுழவின் மாற்சனைமண் ணுன்காம்
 வண்மைகொடை வாய்மைவளம் வலிபுகழைம் பேராந்
திண்ணநிசம் வலியாடா மெண்ணமிசை யுழைவாஞ்
 செண்டுசெண்டு பரிவழியாந் தண்டகங்கான் வகுப்பாம்
எண்ணிலக்க மெள்ளெளிமை கணிதநினை வெழுலாம்
 ஈண்டேயிவ் விடஞ்சடுதி யென்பராண் டவரே. 406.

ஆண்டவிடம் வருடமாம் பாண்டுவெண்மை நோயாம்
 அருந்தாணுச் சிவன்மலைதூ ணிலைதறியைம் பேராங்
காண்டநீர் வனங்கலசந் திரைமுடிவம் புடையாங்
 காண்டகம்பொற் பணிச்செப்புக் கமண்டலமு மாகும்
பாண்டிலே றூர்திவட்டஞ் சுடர்த்தாள்கட் டிலுமாம்
 பதர்வண்ணஞ் சந்தநிறஞ் பண்புமூன் றுகு
மாண்டல்மாட் சிமையிறப்புப் போனதுமூன் றுகும்
 வணரழகு வளைவாகு மீணையிரண்டொப் பதுவே.

ணகர வேதுகை முற்றும்.

தகர வெதுகை

அதமிறங்கல் கீழுலகா மதமதர்ப்புக் கடமாம்
 அதிர்ப்போசை நடுக்கமா மொதுக்கநடை மறைப்பாம்
மதலைபிள்ளை கொன்றைமரக் கலங்கொடுங்கை தூணு
 மதவுபுதல் வனப்புவலி யுடன்மிகுதி யைந்தாஞ்
சிதலைபிணி கறையானுங் கதவங்காப் படைப்பாஞ்
 சிதஞான முடுவெளுப்பாம் புதவுபுல்லுக் கதவாம்
முதலைகராச் செங்கிடையாங் கதழ்வுசினஞ் சிறப்பா
 முதலாதி பொருளிறைவ னரசன்பே ரிதுவே. 402.

இதழுதடு மலரேடாம் அதர்வழியாட் டதாம்
 எதுவிஞ வோரிறையாஞ் சிதடன்மடன் குருடாங்
கதலிகொடி காற்றூடி வாழைதே றுகுங்
 கதுப்போதி கவுளாகும் விதப்புமிகை நடுக்காம்
பதலைவரை தாழியொரு கட்பறை மிடாம்
 பதமழகூண் வரிசைசொற்பேர் தாட்சிவழி காலாந்
திதிபொருள்பக் கங்காப்பா மதன்வனப்பு வேளாஞ்
 சிதருறிவண் டொடுதிவலை துணிதுகளாஞ்சதமே 403.

சதமிறகெண் ணிலைதிரமாம் வெதிர்செவிடன் வேயாஞ்
 சதியுமைகற் பாட்டிரோ கணிதாளங் *கொலையாம்
மிதவைதெப்பஞ் சோறுகுங் கதிவிரைவு கெதியாம்
 விதிவினைபண் பயனுகும் பதியரனூர் தவனும்

மதியசைச்சொல் விதுமாதம் புத்திமதிப் பாகும்
 மதுகமட்டி யிருப்பைதரா மதுரம்வண்டு மகிழாம்
பிதிர்கொடிதூ வற்பிதிராங் கதைகதைதண் டுரையாம்
 பித்திகையே சுவர்முல்லை கருமுகையா தலுமே. 404.

ஆதனுயிர் பேதையுமா மேதமிடர் மறுவாம்
 ஆதிமுத னேரோடல் மண்மாலீ சனுமாம்
பூதமைம்பூ தங்குறளா லிறப்புயிர்நாட் சுசியாம்
 போதகமே புனையிளமை யானையின்கன் றறிவாஞ்
சூதன்முனி சாரதியாம் பூதியம்பா ருடலாஞ்
 சூதமா வண்டிரதந் தோற்றல்பா ரதமாங்
காதல்கொலை யாசையாஞ் சேதுகரை சிவப்பாங்
 கதிரொளியம் பிரவிகருங் காலிகுர லோதே. 405.

ஓதிமம்வெற் பன்னமா மோதையொலி மதிலாம்
 ஓதிமயி ரோந்திமலை பூனையறி வைந்தாஞ்
சாதிகுலஞ் சண்பகமோர் தருப்பிரம்பு கள்ளாஞ்
 சாதகம்புட் பயிற்சிமுறி செனனம்பூ தமுமாஞ்
சோதியுடு விளக்கிரவி சுடர்சோதி சிவனுஞ்
 சுதையமுதான் மகள்சுண்ணச் சாந்துசெல்வமைந்தாம்
பூதிசெல்வ நீறறிவு சேறுதுகள் நரகாம்
 புதைகணைக்கட் டுடல்புதுமை நிறைபுதைத்தல் மாதே.

யாதவமே யிளவேனில் மதுத்தவமூன் றுகு
 மதுமயக்க நறவுதேன் வசந்தமசு ரனுமாஞ்
சூதகமா சூசமின்னூர் பூப்புச்சூ திடமாந்
 தாதுமணற் சந்துரையா மாதிடைச்சொல் பெண்ணும்
பீதகம்பொன் னிருவேலி சாந்துபொன்மை நான்காம்
 பீதமெலி பசலைபன்றி பொன்சாந்தச் சமுமாஞ்
சேதகஞ்சே றணைசிவப்பா மேதியம்பு வாளாஞ்
 சீதைபடைச் சால்கொடுப்பை திருவாங்கோ தையரே.

கோதைகுழற் காற்றொழுங்கு மாலைகைத்தோற் கட்டே
 குடகன்மட வாளுடும்பு வின்ஞெஞன் பதுமாம்
மேதைபுத னிறைச்சிதோ லறிவுகள்ளோ டைந்தாம்
 வேதிதிண்ணை பலகைவிர வுதல்கேட்டை நாளாம்
பேதையறி யான்குருட னேர்பருவம் பெண்ணும்
 பேதியவி டதங்கள்ளு மாறுபா டாகும்
பாதைவழி தோணியாங் கேதுசிகி கொடியாம்
 பாதிரியே குதிரையா டலமெனுமூ துரையே. 408.

மூதுரையா திரைகதையாந் தாதிசகி நாளாம்
 முத்தமே பிரியமிதழ் முத்துநக ரியுமாம்
மாதிரந்திக் காகாய மலையானை நிலமாம்
 மாதர்வனப் பொடுகாதல் மகளிரிடைச் சொல்லாம்
வீதிதெரு வோடலாம் வீதல்கொடை சாவாம்
 வித்தமே பொன்னறிவு பழித்தலென மூன்றாந்
தாதுமலர்த் தாதுடற்று தைம்பூதஞ் சத்த
 தாதுதுகள் காவிக்கல் லாறெனுமிப் போதே. 409.

போதுபோ தலராகுஞ் சாதநிசங் குறளாம்
 புத்தன்மால் பவுத்தன்சாந் தகன்புதிய னுன்காஞ்
சீதநீர் குளிர்முகிலாங் கீதமிசை வண்டாம்
 சேத்துவமை யுறப்பசைச்சொல் செம்மையயங் கருத்
வாதைவட காற்றிடராம் வேதைமாற் றிடராம் [தாம்
 வரும்பதுக்கை மலைதூறும் பதங்கம்விட்டிற் புள்ளாம்
ஓதமொரு நோய்கடலாம் போதமம்பி யறிவாம்
 உத்தரமே மறுவசனம் வடதிசையத் தனையே. 410

அத்தனப்ப னரன்குருவாம் பித்தனரன் மடனும்
 அத்தநாள் வனம்பாதி யாடிபொன்கை பொருளாந்
துத்தமிசை மருந்துபால் வயிறுநெய்யாழ் நரம்பாந்
 தொத்தடிமை பூங்கொத்தாந் தத்தையவ்வை கிளியாஞ்
சித்தமுளந் திடனுகுங் கைத்தல்சினங் கசப்பாஞ்
 சித்தறிவு செயமாகுஞ் சத்தமே ழொலியாம்
நத்தமிர வூர்வளையாம் பத்திரமே விறல்வாள்
 நலஞ்சிறகம் பிலைபடைசிங் காதனஞ்சித் திரமே. 411.

* குலையாம் (பி-ம்)

சித்திரம்பொய் கவியழகா மணக்கடவி வியப்பாஞ்
 சித்திரபா னுக்கதிரோன் கனலாண்டொன் றுகுஞ்
சத்திரங்கைப் படைகுடைசத் திரங்கருவி மகமாஞ்
 சத்தியுமை பெலந்துவசம் வேல்குடைகா றலுமாம்
அத்திரியொட் டகம்பரிவே சரிமரம்வெற் பம்பாம்
 அத்திகட லதவெலும்பு கோறல்கரி யைந்தாம்
பத்திரிபுட் காளிபரி யிலைவான மம்பாம்
 பத்திமுறை யன்பொழுக்கம் வழிபாடுத் தமமே. 412.

உத்தமன் கழகாகு மித்திரனட் பினன்பேர்
 உத்திதிரு வுறுப்பூகம் படப்பொறிதே மலுமாம்
அத்தரைஞாண் சிவப்பசைச்சொல்லிசைப்படுத்த லேந்தாம்
 அத்தினிபெண் பிடியிரண்டாஞ் சுத்திசுசி சங்காம்
பொத்தகஞ்சித் திரப்புடவை பண்டார மேடாம்
 புத்தேள்தெய் வதம்புதிதாம் பைத்தல்சினம் பசப்பாம்
சுத்திகைதார் சம்மட்டி சுடர்த்தண்டு மூன்றுஞ்
 சூழ்நிதம்ப மல்குல்மலைச் சார்பாஞ்சத் தியமே. 413.

சத்தியமே சபதமா முத்திரநாட் பாவாந்
 தைத்தல்செறி குற்றலாந் துத்திபொறி சுணங்காம்

கத்திகைதார் கொடிமரமாம் பத்தொழுக்கந் தசமாம்
 கத்தனிறை சிவனுகுங் கத்திகல்மெய்ப் பொருத்தாங்
குத்தியே மண்ணடக்க மாசானு டாகும்
 கூறுத்தி யுடைமைதா தகிகுடிமுப் பேராம்
வத்திரமே முகங்கலையா மத்தகங்கங் குளமாம்
 வாதுவர்தேர்ப் பாகர்பரி†வடிப்போர்கோத்திரமே 414.

கோத்திரமண் குலமலையாந் தீர்த்தம்விழா நீராங்
 கூத்தனட னுயிராகு மோத்துநூன் மறையாம்
நேத்திரங்கண் பட்டாடை பாத்திசெய்யிற் பகுப்பாம்
 நீத்தம்வெள்ளந் தணப்பாகு மூழ்த்தல்செவ்வி நினைப்
சூத்திரநூற் பாநூலாம் பாத்தடிசில் பகுப்பாஞ் [பாஞ்
 சோத்தியநோய் சோர்வாகுஞ் சித்தைமட னிழிவாங்
காத்திரமெய் கனங்கோபங் கிரிகிரி யடியாங்
 காய்த்தல்சினத் திடல்மரங்காய்த் திடற்போர்தந்
 [திடுமே. 415.

† யடிப்போர் கோத் (யி-ம்)

தகர வேதுகை முற்றும்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[876-வது பக்கத் தொடர்ச்சி]

சோற்கலையின் வாய்மையிது துய்மினனி யென்பார்.

இராவணன் ஒரு தங்கையைத் தடிந்தனர் மானிடர், அதுவும் மந்திரத்தால் மாயத்தா லின்றி, வாளுருவி யென்றால் விந்தையினி வேறென்ன வேண்டும். திசையனைத்தும் செவிடுபட இடியிடியெனச் சிரித்தான் சிரங்களோர் பத்துடைய சேவகன். உண்மையை நவில்வதற்குப் பயந்திவள் ஏதோ பொய்யையே பகர்கின்றாளென எண்ணினன்.

செய்தனர்கண் மானிட ரெனத்திசை யனைத்தும்
எய்தநகை வந்தெரி சிந்தினக ணெல்லா
நொய்தவர் வலித்தொழி னுவன்றமொழி யொன்றோ
பொய்தவிர் பயத்தையொழி புக்கபுக லென்றான்

[மானிடர் இது செய்தனர் என்பதைக் கேட்டவுடன், திசையனைத்தும் கேட்கும்படி ஓர் பெருஞ்சிரிப்பு வந்தது. இருபது கண்களும் நெருப்புப்பொறி சிந்தின. மனிதர் வலிமை மிகவும் அற்பமானது; ஆதலின் நீ உரைத்த மொழி ஏற்றுக்கொள்வதற்கு உரியதொன்றோ! பொய்யை ஒழித்துப் பயத்தை நீக்கி நடந்ததை உள்ளபடி சொல்—என்றான்]

இதற்குவிடை காணுக்கொருகால்உரைத்துப்பயின்றிருக்கின்றா ளாதலின் அரக்கியின் மொழிகள் மாரியெனப் பொழிகின்றன. பயந்திலள் இவள் ஆதலால் ஒளிப்பதற் கொன்றுமில்லை. இராமனையோ மிகநயந்துள்ள் ஆதலால் அவன் வடிவழகையும் வலிமைத்திறத்தையும் மறைத்தொன்றும் பொய்புகல நேர்ந்திலள். எனினும் தன்மீது பழியின்றிப் புக்க புகல்வதாயின் பொய்யினைத் தவிர்க்கவும் இயலாது. எனின், மெய்யேதுவக்கிப் பொய்யே முடிக்கின்ற இவ்வஞ்சமகள் சொற்றிறம் சாலச் சூழ்ச்சிவாய்ந்திருக்கின்றது. இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல் தோன்றிய அத் துன்னருங் கொடுமனக்கூனி, முன் தன் சொல்லாற்றல்கொண்டே கைகேசியின் தூய மனத்தைக் கலக்கவேண்டி நேர்ந்தது. மற்று, மேலைநாள் உயிரொடு பிறந்து தான்விளை காலம் ஓர்ந்து உடனுறை கடிய நோயனாள் இச் சூர்ப்பணகை இன்று தன் சொல்லாற்றல் கொண்டு அவ்விராவணன் மனத்தைக் கலக்கவேண்டுமென்று தலைப்படுகின்றாள். இராவணன் தலைகளை உடைக்கின்ற வகையில் இவ்விருவர் சூழ்ச்சிகளுக்கும் முடிவொன்றே. கூனுடையக்கொடியவள் கூற்றும் காமுகக்கள்வி இவ் வரக்கியின் கூற்றும் பயனளவில் குளகமாயிற் றென்னலாம். அன்றியும், நிருதர்கோன் நாசமாகும் செய்கையில் கூனி விட்டதினின்று பதின்மூன்று வருடங்களுக்கப்பால் சூர்ப்பணகை தொடர்கின்ற இது அந்தாதியும் போல்கின்றது.

இவ்விருவரும் முனைந்ததெல்லாம் தசமுகன் முடிவிற்கே விளைந்ததாலும் அங்கு அக் கைகேசிதன் தோழியின் நோக்கமும் இங்கு இவ்விராவணன் தங்கையின் நோக்கமும்வேறுவேறாகி அமைகின்றன. இருவர் சூழ்வினைகளுக்கும் இலக்காகிநின்றவன் இராமன். ஆயினும் பண்டைநாள் தன்னைப் பாணிவில்லாலடித்து விளையாடினவனான இராமனைக் கெடுக்கப் புக்கனள் கூனி. சூர்ப்பணகையோ தன் கொடி மூக்கினை அரிந்த பின்னும் இராமனை அடைதற்கே அவாவுகின்றனள். குரோதத்தின் கொடுமையை மந்தரையிடத்தும் காமத்தின் பேதைமையைச் சூர்ப்பணகையிடத்தும் காணலாம். ஆதலின் மந்தரையின் சூழ்ச்சியுள் நுழைந்தருவிய நுண்மை, சூர்ப்பணகையின் சொற்களில்தோன்றவில்லை. சிற்றுளிகொண்டு அவள் கைகேசியின் மனத்தினைச் செதுக்கினளென்னின் இவள் இராவணன் மனத்திற் கோர் பெருஞ் சம்மட்டி கொண்டுவருகின்றனள். இதுவேண்டப்படுவதுமன்று. காமத்திற்குமெழுகென மெலியவல்ல இவ்வரக்கனை இணக்க இத்துணைபாடு எற்றுக்கு? இப் பேதை யரக்கிக்குப் பித்தேறிக் கிடக்கின்றது. இல்லையேல், இராமன் ஏவினனென, தன்மூக்கொடு முலையையுங் கடிந்த இலக்குவன்பாற் சென்று தன்னை மணங்கொள்ளுமாறு வேண்டியிருப்பாளோ. இன்னபெற்றிய ளாதலின் இச்சழக்கி, மந்தரையின் நுண்மதி வன்மைக்கு எள்ளளவேனும் இணை

யாகமாட்டாள். கோசலேயும் சீதையும் இராமனும் தனக்கொரு கொடுமை செய்வார் என்று எண்ணவும் அரியளாய் அமைந்தவள் கைகேசி என்பதுணர்ந்து, "ஆம், இவர் மிகக் கொடியர் ஆதலின் உனக்குக் கொடுமையே செய்வார்" என்று எவ்வளவுதான் வற்புறுத்தினும் அவள் ஏற்கமாட்டாள் என்பதையும் தேர்ந்து, "நல்லவரே அவர், ஆயினும், உனக்கு இதனால் இன்னல் நேராமற்றீராது" என்று எடுத்துக்காட்டுபவளாய் மந்தரை,

அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிரிதாம்
மறநி னைந்துமை வலிகில ராயினு மனத்தால்
இறனு றும்படி யியற்றுவ ரிடையறு வின்னல்

[அறமும் அருளும் நிரம்பிய அருந்தவசிகளுக்கும், பெறுவதற்கரிய செல்வத்தைப் பெற்றபின்பு எண்ணம் வேறாகிவிடும். அதுவுமன்றி, இந்த இராமனும் சீதையும் கோசலேயும் உனக்கும் பரதனுக்கும் கொடுமைகள் செய்யவேண்டுமென்று கருதியே உங்களைத் துன்புறுத்தமாட்டார்களாயினும் அவர் செய்கின்றவைகளெல்லாம் உங்கள் மனம் உடையும்படியான இன்னல்களாகவே முடியும்]

என்று கூறுகின்ற நுட்பத்திற்கிணையானவொன்றை சூர்ப்பணகை அனையவர் சிந்தித்துரைத்தலரிது. வீஸரின்பால் நேயம் மிக உடைய ப்ருட்டஸ், தன் மனத்தைத் தானே கலைத்துக்கொண்டு பொதுஜன அபிப்பிராயத்தையும் வஞ்சிக்கும்வகை நாடினனாய்,—

"வீஸரைப்பற்றி உண்மையாக உரைக்குங்கால் அவனது பகுத்தறிவினும் மனோவிகாரங்கள் ஆட்சிகொண்ட நாள்யான் என்றும் அறிந்திலேன். ஆயினும் என்! அடக்கமெல்லாம் இள ஆசையின் ஏணியே போல்வதென்பது உலகறிந்ததொன்று. ஏறுபவன் அதற்கு முகங்கொடுத்து நோக்குகின்றான்; மற்று, அவனே உச்சிப்படியை எய்தியபின்னர், தான் ஏறியவத் தாழ்ந்தபடிகளை அவமதித்தவனாய் அவ்வேணிக்குத் தன் முதுகைத்திருப்பி மேகத்தின்பால் தன் நோக்கத்தைப் போக்குகின்றனன். வீஸரும் அப்படியே செய்யலாம். எனின், செய்யமாட்டாதபடி தடுத்திடு—அவன் இப்போதிருப்பதற்குஇச்சண்டை இயையும்வண்ணம் அமையவில்லையாதலின் அதனை இம்மாதிரி உருப்படுத்து. அவன் ஏதா யிருக்கின்றானோ அது அதிகப்படுமாயின் இந்த இந்த முடிவுகளுக்குப் பாய்ந்துவிடும். ஆதலின் பொரித்தபின்னர்த் தன் னினத்திற்கிணங்கத் தீயதாய் வளருமொரு அரவின் முட்டையெனக் கருதி ஓட்டிலேயே கொன்றுவிடுக."

என்று சூழ்ந்தானென ஷேக்ஸ்பியர் வகுத்ததற்கிணையாகவே கம்பர் கூனியின்வாயில் வரவமைத்த சொற்கள் அமைந்திருப்பதன் அருமை வியத்தற்குரியது.

சூர்ப்பணகைக்கு இத்துணைச் சூழ்ச்சியொன்றும் வேண்டா, அவள் அறியவும் அறியாள். ஆதலின் முதலில், இராமனது எழிற்சுவை தன் நாவில் ஊற ஊறவும், அவ்வீரனது பேராற்றல் இராவணன்றன் செவிகளைச் சுடச்சுடவும் இவை விளம்பினள்—

மன்மதனை யொப்பர்மணி மேனிவட மேரு
தன்னெழில ழிப்பர்திர டோளின்வலி தன்னா
லென்னதனை யிப்பொழு திசைப்பதுல கேழி
னன்மதன ழிப்பரொ ரிமைப்பினனி வில்லான்

[அழகிய வடிவத்தால் மன்மதனைப் போல்வார். திரண்ட தோள்களின் வலிமையால் மேருமலையின் வளர்ச்சியைக் கெடுக்கக்கூடியவர். என்னென்று இப்பொழுது எடுத்துச் சொல்வேன்! கண்மூடித் திறப்பதன்முன், தங்கள் வில்லினால் இவ்வேழுலகங்களில் உள்ளவர்தம் செருக்கை அடக்க வல்லவர்]

வந்தனைமு னித்தலைவர் பாலுடையர் வானத்
திந்துவின்மு கத்தரெறி நீரிலெழு நாளக்
கந்தமல ரைப்பொருவு கண்ணர்கழல் கையர்
அந்தமிற வத்தொழில ராரவரை யொப்பார்

[முனிசிரேஷ்டர்பால் வணக்கமுடையவர் (அல்லது முனிசிரேஷ்டர்களால் வணங்கப்படுபவர்). ஆகாயத்தில் உள்ள சந்திரனைப்போன்ற முகத்தையுடையவர். அலைகளை வீசுகின்ற நீரில் முளைக்கின்ற தண்டோடு கூடிய நறுமணமுடைய தாமரைமலரை ஒத்த கண்களும் பாதங்களும் கைகளும் உடையவர். முடிவில்லாத தவத்தைச்செய்பவர். அவருக்குயார் ஒப்பாவார்]

வற்கலையர் வார்கழலர் மார்பினணி நூலர்
விற்கலையர் வேதமுறை நாவர்நனி மெய்யர்
உற்கலைய ருன்னையொர் துகட்டனையு முன்னார்
சொற்கலை யெனத்தொலைவி றாணிகள் சுமந்தார்.

[மரவுரிதரித்தவர், நீண்ட வீரக்கழலை அணிந்தவர், மார்பிலே பூணூல் அணிந்திருப்பவர், வில்வித்தையில் தேர்ந்தவர், வேதங்கள் தங்கியிருக்கின்ற நாவினையுடையவர். மிகவும் சத்தியத்தையுடையவர். உன்னைக்கண்டு அஞ்சாதவர். அதுவுமன்றி உன்னை ஒரு தூசிக்குச் சமானமாகவும் மதிக்காதவர். சொற்களால் விளங்குகின்ற இலக்கியக்கலைபோன்று குறையாத அம்பறாத் தூணிகளைத் தாங்கியவர்]

ஆறுபுல னஞ்சினம ரக்கரையெ னச்சென்
றேறுநெறி யந்தணரி யம்பவுல கெல்லாம்
வேறுமெனு நுங்கள்குலம் வேரொடும டங்கக்
கோறுமென முந்தையொரு சூளுறவு கொண்டார்.

[உயர்ந்த நெறியைக் கடைப்பிடித்த முனிவர்கள் அவரிடத்தில், வந்து, எங்கள் புலன்கள் தவநெறியில் தணிந்திருப்பதால், அரக்கரைச் சபிக்கமாட்டாது நிற்கின்ற நாங்கள் அவர்செய்யும் கொடுமைகளுக்கு மிக அஞ்சினவர்களாயிருக்கின்றோம், என்று சொல்லவும், எல்லா உலகங்களையும் வென்றிடுவோமென்று வீரம்பேசுகின்ற உங்கள் அரக்கர்குலத்தை வேரோடும் கொன்றழிப்போம் என முன்பு ஒரு சபதம் செய்திருப்பவர்]

மாரருள ரேயிருவ ரோருலகின் வாழ்வார்
வீரருள ரேயவரின் வில்லதனின் வல்லார்
ஆரொருவ ரன்னவரை யொப்பவர்களையா
ஓரொருவ ரேயிறைவர் மூவரையு மொப்பார்

[ஐயனே, ஒரே உலகத்தில் வாழ்கின்ற மன்மதர்கள் இருவர் இருக்கின்றார்களா? இவர்களை விற்போரில் வெல்லக்கூடிய வீரர்களும் இருக்கின்றார்களா? அவர்களுக்கு ஒப்பாகக்கூடிய ஒருவர் இருக்கவும் இயலுமோ! ஏனெனில், அவர்களில் ஒவ்வொருவரே தனித்தனி மும்மூர்த்திகளுக்கும் ஒருங்கே ஒப்பாவார்]

தாராவலய நேமியுழ வன்தயர தப்பேர்
பாராவரு நலத்தொருவன் மைந்தர்பழி யில்லார்
விராவரு வனத்தவன் விளம்பவுறை கின்றார்
இராமனு மிலக்குவனு மென்பர்பெய ரென்றாள்

[பூமிமுழுதும் தன் சக்கரத்தைச் செலுத்திய தயரதன் என்னும் பெயருடைய, புகழ்தற்கரிய நன்மையையுடைய அரசனது மைந்தர். ஒரு பழியும் இல்லாதவர். ஆயினும், அந்தத் தயரதன் கட்டளைப்படி அடைதற்குஅரிய காட்டில் வசிக்கின்றார். இராமனும் இலக்குவனும் என்றபெயர்களையுடையவர்—என்று சொன்னாள்]

இதுகாறும் ஒன்றும் பொய்யில்லை. இராமன்றன் செய்தியையும் செய்கையையும் எத்துணை அவன்வாய்

கின்று அறிந்திருந்தனளோ அத்துணையே கூறினாள். ஆயினும், சொற்கள் இவளுக்கு முதலில் எளிதில் வந்ததில்லையெனும்படி இச்செய்யுள்கள் அமைந்திருக்கின்றன. மன்மதனை யொப்பர்—வீரவில்லியர்—ஓர் பழிப்பிலாதவர், என்றென்று அவர் சிறப்புக்களையே பாராட்டிப் பேசவிழைகின்ற அவள்நாவானது வேறொன்றிற்குத்திரும்புங்கால் இடறுகின்றதுபோலும். "என்னதனை இப்பொழு திசைப்பது" என வியப்பாள்போல் சொற்களுக்கே மயங்குகின்றனள். வடமேரு என்றும் வானத்து இந்துவின் முகத்தர் என்றும், எறிநீரில்எழு நாளக் கந்தமலர் என்றும் வீண் அடைமொழிகள் தந்திவள் தன்வாசகத்தைத் தூக்கப்புகுவது சிந்தனை இல்லாத் தளர்ச்சியால் நேர்வதன்றி வேறன்று. அல்லது, இராமனை நயந்துரைக்காத இடமெல்லாம் இராவணனை வேண்டளவிற்குவிஞ்சியகொடுஞ்சொற்களால் கடிந்துரைப்பதாகி முடிகின்றது. "உன்னையொர் துகட்டனையும் உன்னார்" என்று இவ்வளவு வேகமுடன் இராவணன் முகங்களில் நிந்தனையை எறிவானேன். "நுங்கள் குலம்" என்று தன்னை வேறுபடுத்திக்கொள்ள, இதற்குள் இவள் விபீடணன்பால் எவ்வாறு கற்றுக்கொண்டனளோ! இராவணன் நாசமாம்படி சீதையைக்கவருமாறு பழியின்பால் தூண்டுகின்ற இவள் 'நுங்கள்' குலமென்னப் பிரித்து ஒதுக்குகின்றாள். மற்று, கொணர்ந்தபின் னவனை இடித்துரைத்த கும்பகருணன், பிற்றைநாள், "பிறர்மனை நோக்குவோமை உறவெனப் பெறுதிபோலாம்" என இராவணன் குலத்தையன்றி அவன்பழியையும்வீடணனுக்கெதிரே தனதாக்கிக்கொள்வான். அவனுக்கும் இவள் உடன்பிறந்தவள்தானே! இராமனைப்பயந்த பான்மையால் 'பராவரு நலத்தொருவன்' என்று தயரதனைக் கொஞ்சப்புகுகின்ற இவள் வாயில் தன் தமையன் பொருட்டொரு நயமுடைய சொல் விளையாமல் வறண்டது.

எனினும், சூர்ப்பணகைக்குப் பின்னிற்பவர் கம்பராதலின் இராமன்தாங்கிய தூணிகள் சொற்கலையை உவமையாய் அடைந்தவோர் பெருமையைப் பெற்றன. கலைகள் பலவற்றுள் சொற்கலையென்பது, செவ்வியமதுரஞ்சேர்ந்த நற்பொருளிற்சிறிய கூரிய தீஞ்சொற்களால் சான்றோர்உரைத்தருளிய இலக்கியங்களாம்.முன் கோசிகனுடன் புறப்பட்டபோது இராமன் ஆர்த்த தூணி "மெய்ம்மைபோல் என்றும் தேய்வுறாதது" என்று கம்பர் காட்டியிருக்கின்றனர். இப்பொழுது அது சொற்கலையாகி நிற்கின்றது மெய்ம்மையே இலக்கியங்களாகி வளர்ந்து தோன்றுகின்றதென்பதற்கு இதனினும் சான்றுவேறொன்றுவேண்டா. சொற்கலையன்ன தூணிகளினின்று வருவனவும் "நிசாத கணைகளே." தாடகையின்மீது இராமபிரான் ஏவியசுடுசரம் இத்தகைய இலக்கியத்தூணியிற்றோய்ந்த சொல்லையே ஒத்தது. தீமையின் மறுபெயராகிய நிருதரை இவ்வுலகினின்று தொலைப்பதற்கு இராகவன் விசித்த தூணி இலக்கியமே போன்றதென்ற இவ்வொரு கம்பர்தம் உவமையை நுனித்துணர்ந்தே நம்மனோர் உய்யலாம். தீமையின்றி இவ்வுலகம் நன்மையேயாய்ப் பொலிவதற்கு இலக்கிய உணர்வேயன்றி வேறோர் துணையில்லை. மற்றமுயற்சிகளெல்லாம் பாழுக்கே பாய்விக்கும் என்று இக்கலாநிலயத் தலையங்கங்கள் பேசுகின்ற முறைமை கம்பரது கருத்தோடு சாலப் பொருந்துவதுகாண மிக மகிழ்தல் வேண்டும்.

தீமையைத் தொலைக்கின்றவொரு தொழிலும் பயனுந்தான் சொற்கலைக்கு உளதாமோ என்ற ஐயத்தைத் தீர்ப்பதற்கும் கம்பர் உதவுகின்றார். முன் பாலகாண்டத்தில், பூக்கொய்படலத்தில் ஆடவர்தம் செய்தியைச் செப்புங்கால்,

செய்யிற் கொய்யுஞ் செங்குமு தஞ்செஞ்சிலை யொன்
கையிற் பெய்யுங் காமனு நாணுங் கவினார்தம் [றும்
மையற் பேதை மாதர் மிழற்று மழலைச்சொல்
தெய்வப் பாடல் சொற்கலை யென்னத் தெரிவாரும்.

சிலர் ஆயினர் என்று செப்புகின்ற செய்யுள் இப்பொழுது நினைவின்கண் வருதற் குரியது. அங்கு, காமனேயனைய அழகுடைய ஆடவர் தம் மனதிற்கினிய மாதரார் மிழற்றும் மழலைச்சொற்களை இலக்கியங்களாக ஆராய்ந்தனர் என்கின்றார் இப்புலவர். நல்லாரோடு இணங்கி இன்புறற் கேதுவாகிய அம் மழலைச்சொற்கள் சொற்கலையென்னத் தெரியப் பெற்றமையால், முதிரா அம்மழலையும் முதிர்ந்த இலக்கியமும் உதவும் பெற்றி ஓரேவகையதாகின்றது. இராமன் தூணி போல், எதிர்மறையாய தீமையைத் தீர்ப்பதன்றியும் உடன்பாடாய நன்மையின் இன்பத்தைச் சேர்ப்பதும் இலக்கியவுணர்விற்றோய்ந்தவொரு வாழ்க்கையேயாம் என்பதை இதனாலறிந்துகொள்ளலாம் எனின், தெய்வப்பாடலும் அதுவேயாதல் அரியதன்று. ஆரணமென்றும் அகப்பொருள் என்றும் கருதற்குரியதாய் நிற்கின்றது மணிவாசகப் பெருந்தகை இயற்றியவோர் இலக்கியம். திருக்கோவையை ஓதுமாறு உணர்வுடன் ஓதினால் தசைநயந்த காமத்தால் கடுகுந் தீமையெல்லாம் ஓடாவோ! திருக்கோவையை ஓதுமாறு உணர்வுடன் ஓதினால் மெய்ந்நெறி நன்மையன் எம்மீசன் நாமத்தால் வரும் நன்மையெல்லாம் நண்ணாவோ! எனின் இலக்கியங்களைத் தீண்டாதார் அனைவரும் தீண்டாதாரே— வேறோர் இகல் என்!

—*—

சேக்கிழார் திறனும் திருத்தொண்டர் புராண எழுச்சியும்.

"பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே," என்று தமிழ்த் திருநாவுக்கரசர் விதந்தோதிய கூத்தப்பெருமானைக் கைதொழுவான் ஓரானித்திங்கள், திருமஞ்சனநன்னாளில், கன்னித் தமிழ்நாட்டின் காவலனும், சீரிய உடலும் சிறிய கண்களுமுடையனவாய்ச் செம்மதம் பொழியும் வேழங்கள் செறிந்த சேரநாட்டின் செம்மலும், வேங்கிட நாட்டின் வேந்தனும் தில்லைமூதூர் புக்கனர். அப்பதியை ஆண்டிருந்த சோழவள்ளல், "அணுவைத் துளைத் தேழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த" குறளின் மாட்சியை மனத்துட்கொண்டு அக்குறளின் விருந்தோம்ப லதிகாரத்தில் போந்துள்ள, "மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து; வித்துமிடல் வேண்டுங்கொல்லோ விருந்தோம்பி மிச்சின்மிசைவான்புலம்; அகனமர்ந்து செய்யாளுறையும் முகனமர்ந்து நல்விருந் தோம்புவா னில்," என்ற அடிகளை நன்கு தேறியுள்ளமையோடு தேறியபடியே ஒழுகுபவனும், இயற்கை யன்னையின் இன்னருளால் சோற்று வளப்பமும் சேரப்பெற்றவனுமாகையால் புக்கவரை எதிர்கொண் டேத்தியும் நல்லிருக்கைகள்

உதவியும் நல்லுணவு படைத்தும் நனி போற்றினன். நால்வரும் உளமகிழ அளவளாவித் தம்மில் ஒத்த வுணர்வுடையோராய்த் திருமஞ்சனவிழா இனிதின் நிறைவேறக்கண்டு கண்ணுதலான் கழல்வணங்கிக் கழி பேருவகை பூத்தார்.

அந்நாளில், அவ்வவைக்கண் போந்த பாவலன் ஒருவன்,

"வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து— பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றோன்
நன்னாடு சான்றோ ருடைத்து."

என்ற ஔவையார் பாட்டைப் பாடுதலும் ஏனைய வேந்தல்களது உள்ளம் புண்பட்டமையைச் செம்பியனுணர்ந்து அவர்களைத் தெளிவிப்பான் ஓர் செய்கையை உன்னலானான்.

பிறகு, நாடுகளெல்லாவற்றிலும் மலை, கடல், பூமி ஆய மூன்றிற்கும் தனித்தனிப் பெரிய பொருள்கள் எவை எவை என்பவற்றை அறிந்தோர் சோழ அவைக்கு வரைந்தனுப்பவேண்டிக்கொள்ளப்படுகின்றதாய்ப் பறைசாற்றி அறிவித்துவருமாறு வினையாளர்களுக்கு ஆணைதந்தான்.

சின்னாட்களில், பட்டினால் பொதியப்பெற்ற முடங்கலொன்று தம்மையடைதலும் மன்னர் நால்வரும் பட்டை நீக்கிப்படிக்க,

1. "நிலையிற் றிரியா தடங்கியான் தோற்ற
மலையினு மாணப் பெரிது"
2. "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது"
3. "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

என்ற மூன்று வாயுரைவாழ்த்துக்களும், அவ்விடையையனுப்பினோர் யாரெனவெழும் வினாவுக்கு விடையும், தரப்பட்டிருந்தமையையறிந்து முன் மனங்கன்றிய காவலர் தொண்டைநாட்டின் புறம்பாய நாட்டினுள்ளார் ஒருவரும் விடைகூற முன் வாராமையையும் ஓர்ந்து, தமிழ்மூதாட்டியின் பாடலின் அருமை பெருமைக்கு ஆதரவளித்தகன்றனர்.

இன்னவாறு தனக்கேயன்றித் தமிழ்ப் பெருமாட்டிக்குமுள்ள சிறப்புக்கள் சிறப்புற்றோங்கக் காரணமாயிருந்த அறிஞரை அநபாயன், "அறிவுடையொருவனை யரசனும் விரும்பும்," என்று ஆன்றோர் வாக்கின்படி அமைச்சராக்கிக்கொள்ள விழைந்து, பாலாற்றின் நீர்வளத்தால் செழித்துத் தொண்டைநன்னாட்டினுள்ள, இருபத்து நான்கு கோட்டங்களில் ஒன்றாய புலியூர்க் கோட்டத்திலுள்ள குன்றத்தூரில் வாழும் வேளாளரான சேக்கிழார் மரபில் தோன்றி, கல்வி, அறிவு, ஒழுக்கம், அன்பு, அறம், கடவுள்வழிபாடு முதலிய நற்பண்புகளில் மேம்பட்டவராகிய அருள்மொழித்தேவரை யண்மித் தனது கருத்தை வெளியிட்டான். வேந்தனது விருப்பிற்கிணங்கித் தேவரும் அமைச்சுத்தாங்கி அறம், பொருள், இன்பம், வீடென்னும் நாற்பொருளும் நானிலத்தோர் அடையவேண்டுவன செய்வாராயினர்.

அஃதவ்வாறாக, செம்பியன் சைனர்களது காப்பியமான சீவகசிந்தாமணியைப் போற்றத் தலைப்பட்டான். அறிந்த வமைச்சர், மன்னனேயாயினும் அறிவு பேதுறுங்கால் "அறிகொன்றறியா னெனினு முறுதி யுழையிருந்தான் கூறல் கடன், என்றும் "இடிப்பாரையில்லாவேமரா மன்னன் கெடுப்பாரிலானும் கெடும்," என்றும் செந்நாப்போதார் செப்பியுள்ளமைக்கிணங்க அமைச்சன் தெளிவிக்கக் கடமைப் பட்டுளானாகையால் சீவகசிந்தாமணியினால் இகபர இன்பங்கள் எய்துவ தியலாதென அறிவுறுத்தலாயினான். காவலனும், எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு!' என்பது பொய்யா மொழியாகையால் நன்கு கருத்திலாய்ந்து தெளிந்து இகபரமளிக்கவல்ல தெதுவெனக் கடாவினான். வித்தகச்சேக்கிழார், இறைவனடியாருக்கு எளிவந்து உதவும்பெற்றி நிறைந்த நாயன்மார் வரலாறுகளைத் திறம்படச் சொல்லிவரலாயினர். செவிமேற்ற இறைவன் அனலிடைப்பட்ட மெழுகென உளநெகிழப்பெற்றுத் தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்என்ற நெஞ்சினனாகையால் அச்சீரியரை நோக்கி அவற்றையெல்லா மொரு காவியமா யாத்துதவுமாறு வேண்டி நின்றான். அப்பெரியாரும் தில்லையடைந்து அம்பலவாணனருள்பெற்றுத் திருத்தொண்டர்புராணம் இயற்றி முடித்துத் தொண்டர் சீர்பரவுவார்என்ற அறிஞர் புகழுக்கும், "செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலாதார்" என்ற மதாநுபங்கியார் கூற்றிற்கும் இலக்காகி விளங்கலாயினர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்



டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள்:

சந்தனாதி 6 அவுன்ஸ் ரூ.	1-0-0
அமிர்தாமலக "	0-12-0
பிருங்காமலக "	0-12-0
ஸ்திரீகளுக்கு	
ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. G1, மெடிகேடட்-டப்பி

I.D.L. ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்தசிற்றமணக்கு எண்ணெய்
காஸ்ட்ராலகஸ்

ஜ்வரேக்
எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ருபா **0-6-0**

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணா **0-6-0**

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முடவுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதவர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அல்மரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்திபாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றன.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவசரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— டைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

கந்தகோட்டத் திருப்புகழ்:—திருப்புகழ் சுவாமியார் என்றும், தண்டபாணி சுவாமிகள் என்றும், முருகதாசர் என்றும், அழைக்கப்படுகின்ற பெரியாரால் இந்நூல் பாடப்பெற்றது. இந்நாள்வரையில் ஏட்டுப் பிரதியில் இருந்தஇது, பெரியமெட் கல்யாணி கம்யாரால் புத்தகரூபமாக வெளியிடப்பட்டது. வேண்டுவோர் சென்னை "லோகோபகாரி" கார்யாலயத்தினின்று பெற்றுக்கொள்ளலாம்.

***

கண்ணாடி வீடு:—அமெரிக்காவில் ஒரு தனவந்தர் கண்ணாடிக் கற்களால் வீடு கட்டுகின்றனராம். தூசி, சப்தம், வெப்பம், குளிர்ச்சி, இவைகளினின்று மனிதரைக் கண்ணாடி பாதுகாக்குமென்றும், எனவே இது சுகாதாரத்திற் கேற்றது என்றும் கூறப்படுகின்றது.

***

பெரிய வீடு:—அமெரிக்க நியூயார்க் நகரில் 68 அடுக்குள்ள மெத்தைகளோடு கூடிய ஒரு பெரிய வீடு இப்பொழுது கட்டி முடிக்கப்பட்டுளதாம். இவ்வளவு அடுக்கு மெத்தையுள்ள வீடு இதுவரை உலகத்தில் எந்த நகரத்திலும் கட்டப்பட்டதில்லையாம்.

***

வர்ணத்தின் சக்தி:—இங்கிலாந்திலுள்ள சுகாதார சங்கத்தின் தலைவரான ஸர்வில்லியம் அர்பத்நட் லேன் என்னும் ரசாயண சாஸ்திர ஆராய்ச்சியாளர் கூறுவதாவது:—வர்ணங்களுக்கு இருக்கின்ற சக்தியை நாம் இதுவரை அறிந்ததில்லை. மனிதனுடைய ஆயுளை வர்ணங்கள் வளர்க்கும் சக்தியுடையன. பெண்கள் பல வர்ணமுள்ள ஆடைகளை அணிவது அவர்களது உடல் நலத்திற்கும் ஆயுள் வளர்ச்சிக்கும் நல்லது. எனவே இனிப் பெண்கள், வெள்ளை ஆடையையோ, அல்லது ஒரு நிறமுள்ள ஆடையையோ அணியாமல் பல நிறமுள்ள ஆடையை அணிதல் நலம்.

***

பறக்கும் பெல்ட்:—பிரான்ஸ் தேசத்துப் பிரபல விஞ்ஞான சாஸ்திர பண்டிதரான மாக்னகன் என்பவர் கூறுவதாவது:—ஆகாயவிமானத்தின் உதவியில்லாமல், பட்சிகள் போன்று இனி மனிதன் பறக்கும்நாள் சமீபத்திலேயிருக்கின்றது. இரண்டு சிறு இறக்கைகள் உள்ள பெல்ட் ஒன்றை மனிதன் கட்டிக்கொண்டு ஆகாயத்திலே பறப்பது சுலபமே. சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாக இன்னும் எத்தனையோ ஆச்சரியத்தை இந்தநூற்றாண்டிலேயே மனிதன் காணலாம்.

***

காயத்ரியின் மகிமை:—மைலாப்பூரில் சென்ற வாரம் ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில் அவர்கூறியதாவது:—வேதத்தின் சாரம் காயத்ரிஜபம். அதைத் தினம் ஒன்றிற்கு 1008 முறை ஜபித்தல் அவசியமாகும். அல்லது குறைந்தபக்ஷம் 108 காயத்திரியாவது எல்லோரும் தினந்தோறும்செய்யவேண்டும். உத்தியோகத்திலிருப்பவர்களுக்குத்தினம் நேரமிராது. ஆனால் நல்ல வேளையாக ஞாயிற்றுக்கிழமை ஓய்வு உளது. ஞாயிறு சூரியனுடைய தினம். அன்று. 1008 காயத்ரிஜபம்செய்து, காயத்ரி தேவதையைத் தியானம் செய்வது மிகவும் நல்லது. அன்றாவது ஒவ்வொருவரும் 1008 காயத்ரி செய்து நலமுறலாம்.

***

கதர் இயக்கம்:—கதரியக்கத்தைப்பற்றித் தமிழ்நாடு கதர்சங்கத்தார் அறிவிப்பதாவது:—

தமிழ்நாட்டில் கதர்இயக்கம்வளர்ந்து வருகின்றது. 1923-24 இல் 4,72,364 ரூபாய் கதரே விற்பனையாயின. 1924-25 இல் 7,05,788 ரூபாய் கதர் விற்பனையாயின. 1925-26இல் 8,83,220 ரூபாய்க்கும், 1926-27 இல் 10,97,027 ரூபாய்க்கும், 1927-28 இல் 9,97,465 ரூபாய்க்கும், 1928-29 இல் 11,37,561 ரூபாய்க்கும், 1929-30 இல் 16,16,524 ரூபாய்க்கும் 1930-31 இல் 30,55,597 ரூபாய்க்கும் கதர் விற்கப்பட்டன. ஆனால் 1931-32 வளர்ச்சி அவ்வளவுஇல்லை. தமிழ் நாட்டார் இன்னும் அதிகமாகக் கதரை வாங்க வேண்டும்.

***

காந்தியடிகள்:—மலையாளத்தில் ஸாமொரின் அரசகுடும்ப மேற்பார்வையிலுள்ள குருவாயூர் கோயில் இன்னும் ஆதித்திராவிடர் பிரவேசத்திற்குத் திறந்துவிடப்படவில்லை. ஜனவரி மாதத்திற்குள் ஆதித்திராவிடர்களுக்கு அவ்வுரிமை வழங்கப்படாமல் போனால் தாம் மறுபடியும் பட்டினி கிடக்க நேரிடுமென்று காந்தியடிகள் எரவாடாச்சிறையிலிருந்து பத்திரிகைகளுக்கு அறிவித்துள்ளார்.

***

ருஷியாவிலுள்ள கிராமவாசியான இவான் லட்சர்ஸ் என்பவனுக்கு இப்பொழுது 114 வயதாம். அவன் சமீபத்தில், சினிமாவில் நடிக்க மாஸ்கோ நகரில் உள்ள ஒரு சினிமாப்படம் எடுக்கும் கம்பனியில் சேர்ந்திருக்கின்றானும்.

***

திருடனைப்பிடிக்கும் யந்திரம்:—வி. ஜின், டேவிட் லேன், என்னும் இரு ஆங்கில நிபுணர்கள் ஒரு நூதனமான கருவியைக் கண்டுபிடித் திருக்கின்றனராம். இந்த யந்திரத்தை வீட்டில் வைத்துக்கொண்டால், திருடர்கள் வீட்டில் நுழைந்ததும் அது டெலிபோனில் போலீசாருக்கு அவன் வரவை அறிவித்துவிடுமாம். இது திருட்டுப் பயத்தை அகற்ற உபயோகப்படும் என்று லண்டன் போலீசார் மகிழ்கின்றனராம்.

***

ஆப்கன் குழப்பம்:—மாஜி ஆப்கன் அரசான அமனுல்லாக்கானின் நண்பனும் ராணுவத்தலைவனுமான குலாம் நாபிகான் என்பவர், இப்பொழுது இருக்கின்ற ஆப்கன் அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு அமனுல்லாவை மீண்டும் அரசனாக்கும் எண்ணத்துடன் இரகசியச் சூழ்ச்சி செய்துவந்தார் என்னும் குற்றத்திற்காக அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது என்று காபூல் செய்தி கூறுகின்றது.

***

ரயில்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தம்:—பெரம்பூர் எம். எஸ். எம். ரயில்வேத் தொழிலாளர் வேலை நிறுத்த நிலையில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. ரயில்வே அதிகாரிகள் கையொப்பத்துடன் ஓர் அறிக்கை ஆகாயவிமான மூலம் பிரசுரிக்கப்பட்டுளது. அது கூறுவதாவது:—

14-ந்தேதி யன்று உங்கள் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளலாம். வேலை நிறுத்திய நாட்களுக்குச் சம்பளம் தரமுடியாது. சென்ற ஆண்டு வேலையினின்று அகற்றப்பட்ட 93 பேரும் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள். தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்வது பற்றியும், வேலையினின்று நீக்குவது பற்றியும் மற்ற நிர்வாக விஷயமாயும் தொழிலாளர் சங்கத்தின் யோசனை ரயில்வே அதிகாரிகளுக்கு வேண்டியதில்லை.

***

சிலோனுக்குப் பொறுப்பாட்சி:-இம்மாதம் 14ந்தேதி திங்கட்கிழமை, சிலோன் நாட்டுத் தேசிய கமிட்டிக் கூட்டம் கொழும்பில்கூடியது. இக்கூட்டத்தில் சிலோனுக்கு உடனே பொறுப்பாட்சி யளிக்கப்படவேண்டுமென்று ஒருதீர்மானம் செய்யப்பட்டது. இத்தீர்மானத்தை அரசாங்கத்தார் ஏற்றுக் கொள்ளாமற்போனால் பின் இக்கமிட்டியார் என்ன செய்யவேண்டுமென்பது பற்றியும் இக்கூட்டத்தில் வாதம் செய்யப்பட்டது.

188980

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்஻ல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

:: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்
அமிர்தார்ணவ லேகியம்
அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனம்! ஆரோக்கிய கிரந்தம் இனம்!
கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over ...	... Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of ...	... 16.54 %
Claims paid up to end of 1931 over ...	... Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—
R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)